



விலை ரூபா 40


பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 35 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை (25.11.2024)




# சூறாவளியாக வலுவடையும் காற்றழுத்தம்




## வடக்கு, கிழக்கில் அடை மழை; வெள்ளம்: இயல்பு முற்றாக பாதிப்பு

பாலகணேஷ் டிலுக்ஷா

இயற்கை பேரிடர்கள் குறித்து நாட்டின் பல பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வங்காள விரிகுடாவை சுற்றியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியே இதற்கு காரணம்.

இன்றைய தினத்திற்குள் தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி நாட்டின் வடமேற்கு திசையில் நகரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் சில தினங்களுக்கு நாட்டின் பல பகுதிகளில் காற்றுடன் கூடிய பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை,

02

## பொப்பி மலர் தினம் அனுஷ்டிப்பு


செய்தி 2ம் பக்கம்

## நீர்கொழும்பில் படகு விபத்து தந்தை - மகள் மாயம்

**ஐவர் மீட்பு**



நீர்கொழும்பு முன்னக்கரை தடாகத்தில் படகு விபத்துக்குள்ளானதில் 50 வயதுடைய நபரும் அவரது 20 வயது மகளும் காணாமல் போயுள்ள நிலையில் மேலும் ஐவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து அண்மையில் நாடு திரும்பிய கத்தோலிக்க மதகுரு உட்பட 7 பேரை ஏற்றிச் சென்ற படகு, நேற்று (24) பிற்பகல் தடாகத்தில் மற்றுமோர் பெரிய படகுடன் மோதியதில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதையடுத்து, அதே இடத்தில் பயணம் செய்த மற்றொரு படகில் சென்றவர்கள், பாதிரியார் உட்பட ஐந்து பேரை மீட்டுள்ளனர்.

எனினும், படகில் பயணித்த தந்தையும் மகளும் காணாமல் போயுள்ளதாக நீர் கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் இருவர் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். முன்னக்கரையைச் சேர்ந்த மூன்று

02

## க.பொ.த.உயர் தர பரீட்சை நாடெங்கும் இன்று ஆரம்பம்

- 333,185 பரீட்சார்த்திகள், 2312 பரீட்சை நிலையங்கள், 319 இணைப்பு நிலையங்கள்!!

முகம்மட் முக்தார்




2024 ம் ஆண்டுக்கான கல்விப்பொதுத்தராதர பத்திர உயர்தர பரீட்சை நாடாளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 2312 பரீட்சை மண்டபங்களில் இன்று(25) ஆரம்பமாவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கென பாடசாலை, தனியார் பரீட்சார்த்திகளென 3,33,185 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இப்பரீட்சை நிலையங்களை ஒருங்கிணைப்பதற்காக நாடளாவிய ரீதியில் 319

02

## மஹிந்த தேசப்பிரியவின் வீடு உடைக்கப்பட்டு கொள்ளை



தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப் பிரியவின் வீடு உடைக்கப்பட்டு தளவாடங்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

அம்பலாங்கொடை பொரம்பவில் பகுதியில் அமைந்துள்ள அவரின் வீட்டிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வீடு உடைக்கப்பட்டு கொள்ளையிடப்படுவது இது மூன்றாவது முறை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை பொரம்பவில் வீட்டில் கடந்த சில நாட்களாக மஹிந்த தேசப்பிரிய இருக்கவில்லை என்பதோடு நேற்று முன்தினம் (23) பிற்பகல் வீட்டுக்கு வந்தபோது தனது வீடு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

02

## பொதுத் தேர்தல் : வரவு - செலவு அறிக்கை சமர்ப்பிக்க கால அவகாசம்

கனூஷியா புஷ்பகுமார்

பொதுத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தங்களது வரவு மற்றும் செலவு அறிக்கையை அடுத்த மாதம் 06 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இந்த அறிக்கைகளை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுக்கான நிதி வரவு மற்றும் செலவு அறிக்கைகளை கட்சி செயலாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும், அதேவேளை, சுயேட்சை குழுக்களின் சார்பாக அந்த குழுவின் தலைவர் சமர்ப்பிக் வேண்டும். பொதுத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில்

02

## அரசாங்கத்திற்கு எதிராக மீனவர்கள் போராடும் நிலை ஏற்படும்




### வடமராட்சி வடக்கு சமாசம் அறிவிப்பு

கடந்த அரசாங்கத்தைப் போல் இந்த அரசும் நடக்குமேயானால் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்குள் மீனவர்கள் தள்ளப்படுவார்கள் என வடமராட்சி வடக்கு சமாசத்தின் உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (24) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீரியல்வளத் துறை அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம். இதன் போது மீன்பிடி நீரியல்வளம் தொடர்பாக ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டுள்ள சட்டங்களை அமுல்படுத்துமாறு

02

## சிம்மாசன உரை தமிழர்களுக்கு ஏமாற்றம் : பச்சை, நீலம் போல் சிவப்பும் ஏமாற்றுமென சந்தேகம்

செல்லையா-பேரின்பராசா

பத்தாவது நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைத்தஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்க,தனது சிம்மாசன உரையில், புரையோடிப் போயுள்ள தேசிய இனப்பிரச்சினை பற்றியோ அதற்கான நியாயமான தீர்வு பற்றியோ கருத்தினை முன்வைக்கவில்லை. அது தமிழர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக அமைந்தது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் சிம்மாசன உரை குறித்து அவர் மேலும் கருத்துரைக்கையில்.

ஈழத்தமிழர்கள் சுதந்திரத்தின் பின்னர்,76 ஆண்டுகளாக சுதந்திரக வருகின்றார்கள்.

02



## வெள்ளத்தில் மூழ்கும் மன்னார் : மக்கள் அவதி


- மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்வு
- பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவு

வாஸ் கூஞ்ஞ

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிப்படைந்து வருவதுடன் பல கிராமங்கள் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. மக்களின் இடம்பெயர்வும் தொடர்கின்றது.

மன்னார் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள்,

02



# வெளிநாட்டிலிருக்கும் இலங்கைப் பணியாளருக்கான வாகன இறக்குமதியில் மோசடி: கணக்காய்வு தகவல்

**கனூஷியா புஷ்பகுமார்**

கடந்த அரசாங்கத்தின் போது, வெளிநாட்டிலிருக்கும் இலங்கைப் பணியாளர்களுக்கு இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான அனுமதிப்பத்திரங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் மேற்கொண்ட விசேட கணக்காய்வில் வெளிவந்துள்ளது.

அதன்காரணமாக, வெளிநாட்டில் பணிபுரியும் தகைமையுடைய இலங்கையர் பலருக்கு குறித்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என கணக்காய்வாளர் டபள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருக்கும் இலங்கைப் பணியாளர்களுக்கு இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் வேலைத்திட்டம் கடந்த அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கையின் போது மேலும் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதை தேசிய கணக்காய்வு அலுவலகம் கண்டுபிடித்துள்ளது.

இந்த கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் மூலம் கடந்த நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளது.

கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில் அரசாங்கத்திற்குப் பல பரிந்துரைகள் வழங்கப்பட்டு இருப்பதாகவும் தெரிய வருகிறது.

# பொப்பி மலர் தினம் ஜனாதிபதி தலைமையில் அனுஷ்டிப்பு

ஆயுதப்படையின் நினைவு தினம் – 2024 முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில், கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் அமைந்துள்ள இராணுவ வீரர்களின் நினைவு தூபிக்கு அருகில் நேற்று (24) முற்பகல் நடைபெற்றது.

முதலாம் உலகப் போரிலிருந்து இன்று வரை தாய்நாட்டின் பாதுகாப்பிற்காக உயிர்த் தியாகம் செய்த சிப்பாய்களை நினைவுகூரும் முகமாக இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றோர் சங்கத்தினால் இராணுவத்தினர் ஒத்துழைப்புடன் வருடாந்தம் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகிறது.

நிகழ்விடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் லெப்டினன் கேணல் (ஓய்வு) அஜித் சியம்பலாபிட்டிய வரவேற்றார்.

சர்வமத வழிபாடுகளின் பின்னர் உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூரும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றோர் சங்கத்தின் பிரதிநிதிகள் இராணுவ நினைவுத்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொண்தா, பாதுகாப்புப் பதவிநிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படைத்தளபதிவைஸ்அட்மிரல்பிரியந்த பெரேரா, வெளிநாட்டுத் தூதுவர்கள், முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள், நாட்டுக்காக உயிர் நீத்த முப்படை வீரர்களின் குடும்பங்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாதிவல வீட்டுத் தொகுதி: புதிய எம்பிக்கள் விண்ணப்பம்

**கனூஷியா புஷ்பகுமார்**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவல உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில், புதிய அமைச்சர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் 35 பேர் வீடுகளைக் கோரி விண்ணப்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, எதிர்வரும் 3ஆம் திகதி தொடக்கம் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவல வீடுகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து 40 கிலோமீட்டருக்கு உட்பட்ட தொலைவில் வீடு அற்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவல உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில் வீடு வழங்கப்பட வேண்டும்.

மாதிவல வீட்டுத் தொகுதியில் வீடுகளை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டது.

இதேவேளை, மாதிவல வீட்டுத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

## பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு புதிய தொலைபேசி இலக்கம்

பொலிஸ் ஊடகப் பிரிவுடன் தொடர்பு கொள்ள புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 0112 887 973 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மிக வேகமாக செயற்படும் வசதிகளுடன் பொலிஸ் ஊடகப் பிரிவை இனிமேல் தொடர்புகொள்ள முடியும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### வெள்ளத்தில் மூழ்கும்...

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது பெய்து வரும் தொடர் மழையினால் மன்னார் மாவட்டத்தில் அதிகமான இடங்கள் வெள்ளக் காடாக காட்சியளித்து வருகின்றது.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மன்னார் தீவுப் பகுதி மக்கள் கடுமையான பாதிப்புகளுக்குள்ளாகி வருகின்றனர். இப்பகுதியில் வெள்ள நீர் கடலுக்குள் செல்வதற்கான சரியான வடிகால் அமைப்பு மேற்கொள்ளப்படாமையால் மன்னார் தீவு முழுவதும் காடுகள், வீடுகள், தெருக்கள் என்பன வெள்ளக்காடுகளாகவே காட்சி அளிக்கின்றன.

இதுவரையில்,மன்னார் தீவில் 2074 குடும்பங்களைச் சேர்ந்த 7916 நபர்கள் வெள்ளத்தால் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரட்ணம் திலீபன் தெரிவித்தார்.

அத்துடன், 222 குடும்பங்களைச் சேர்ந்த 781 பேருக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 173 குடும்பங்களைச் சேர்ந்த 556 நபர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் தீவில் வெள்ளத்தால் பாதிப்படைந்து வரும் மக்களின் நலன் கருதி 6 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எழுத்தூர் செல்வநகர் முத்துமாரி கோவிலில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும் அன்னை திரேசா பாடசாலையில் 56 குடும்பங்களைச் சார்ந்த 305 பேரும் பேசாலை சென் மேரிஸ் பாடசாலையில் 26 குடும்பங்களைச் சார்ந்த 75 பேரும் , அல்மினா வித்தியாலயத்தில் 6 குடும்பங்களைச் சார்ந்த 20 பேரும் ஓலைத்தொடுவாய் பாடசாலையில் 53 குடும்பங்களைச் சார்ந்த 156 பேரும் பேசாலை முருகன் கோவிலில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் தொடர்ந்து மழை தொடருமாயின் இடம்பெயரும் மக்கள் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் கொள்ளப்படுகின்றது.

இதேநேரத்தில், மன்னாரில் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை தேசிய மக்கள் சக்தி வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வத்தம்பி திலக்நாதன் மற்றும் ஆறுமுகம் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் ஆகியோர் வங்காலை ,மன்னார் , தாழ்வுபாடு மற்றும் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களையும் நீரில் மூழ்கியுள்ள வயல் நிலங்களையும் நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

### சிம்மாசன உரை...

இலங்கையின் சுதந்திரம் என்பது 74 சதவீதமான சிங்கள மக்களுக்கு வரையறுக்கப்பட்டதாக சிங்களத் தலைவர்கள் நினைக்கிறார்கள். 26 சதவீதமான தமிழ் பேசும் மக்களுக்கு அந்த சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை.

இதற்காக தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் தலைமையில் ஈழத் தமிழர்கள் 30 ஆண்டுகள் அறவழியில் போராடி இருந்தார்கள். அப்போராட்டத்தினை பேரினவாதம் கண்டு கொள்ளவில்லை; தீர்வும் வழங்கவில்லை.

அதனையடுத்து 30 ஆண்டுகள் தமிழ் இளைஞர்கள் குறிப்பாக விடுதலைப் புலிகள் 30 ஆண்டுகள் பலமான ஆயுதப் போராட்டத்தினை ஒழுக்கக் கட்டுக்கோப்புடன் நடாத்தினார்கள். அப்போராட்டம் உலகத்தின் பார்வையைத் திருப்பியது. இருந்தாலும் 22 இற்கு மேற்பட்ட நாடுகளின் ஒத்துழைப்புடனும், உள்ளகக் காட்டிக் கொடுப்புடனும் அப்போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டது.

போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் அந்தப் போராட்டத்திற்கான நியாயம் இருக்கவே செய்கின்றது. போரின் பின்பும் பேரினவாத ஆளும் கட்சிகள் தமிழர்களுக்கான இனப்பிரச்சினைக்குரிய தீர்வைத் தரவில்லை.

பச்சைக் கட்சி,நீலக் கட்சி ஏமாற்றியது போல் சிவப்புக் கட்சியும் தீர்வு விடயத்தில் ஏமாற்றம் தருவார்களோ என்ற சந்தேகம் ஜனாதிபதியின் சிம்மாசனப் பிரசங்க உரையிலிருந்து வெளிப்பட்டுள்ளது.

இனவாதம் மதவாதம் போன்ற அடிப்படை வாதங்கள் இனி இருக்காது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். சட்டவாட்சி, ஜனநாயகம் பலப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஊழல் மோசடிகள் இடம்பெறாது என்ற கருத்தும் கூறப்பட்டது.

இவற்றை தமிழர்கள் வரவேற்கின்றார்கள். ஆனால், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்கான தீர்வு கூறப்படவில்லை.தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிக் கூறப்படவில்லை.மொத்தத்தில், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறிப்பிடாமை தமிழர்களுக்கும் தமிழரசுக்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

மேலும் மதவிவகாரங்களுக்கான அமைச்சினைத் தவிர்த்து பௌத்த சாசன அமைச்சு பற்றிய ஜனாதிபதியின் நிலைப்பாடும் மதவாத சிந்தனையிலிருந்து புதிய அரசாங்கமும் விடுபடவில்லை என்பதை வெளிக்காட்டுகின்றது. எது எப்படியாக இருந்தாலும் ஜனாதிபதியின் முற்போக்கான சிந்தனைகளைத் தமிழர்கள் கவனத்தில் கொண்டுள்ளார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தைத் தமிழரசுக்கட்சி என்றும் மறக்காது முன்னெடுக்கும் என்றார்.

### சூறாவளியாக...

அம்பாறை முதல் ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்க கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நாட்டின் பல பகுதிகளில் 150 மில்லி மீற்றரிலும் அதிகரித்த மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாகவும்

மணிக்கு 40 கிலோமீற்றரிலும் அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை எதிர்வரும் சில நாட்களுக்கு தொடரலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும், அனர்த்த அபாயம் ஏற்பட்டால் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி அறியப்படுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள இந்த தாளமுக்கத்தினால், வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் ஏற்படும் பாதிப்புகளை எதிர் கொள்ளும் வகையில், அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அறிவிப்புகள் கூறுகின்றன.

இதேவேளை, சீரற்ற வானிலையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட அனர்த்தங்களால் 03 மாகாணங்களைச் சேர்ந்த 15,622 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வட மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணத்திர் 7,025 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 29 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதே போல, கிளிநொச்சி மாவட்டத்தில் 365 பேரும், மன்னார் மாவட்டத்தில் 7,854 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 399 பேர் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

**யாழ்ப்பாணம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள்**.....

அனர்த்த நிலைமைகளை கருத்திற்கொண்டு பாதுகாப்பும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீப் “ ஒருவனுக்கு கூறினார்.

பிரதேசங்களிலே மரக்கிளைகளை வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம், பாதிக்கப்படும் மக்களுக்கு மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக சமைத்த உணவுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கூறினார்.

நிலைமையைப் பொறுத்து தேவைக்கேற்ப உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனரத்த நிலைமைகளை கருத்திற்கொண்டு மட்டக்களப்பு அம்பாறை பொத்துவில் பிரதேசங்களிலும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தென்மேற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்பதால்

இந்தியாவின் தமிழ்நாட்டில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி பலத்த மழை வீழ்ச்சி பதிவாக கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### அரசாங்கத்திற்கு எதிராக...

கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்தோடு,ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வடக்கில் நீரியல் வளத்துறை சார்ந்து,அரச அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்கள் பல முறைகேடான செயற்பாடுகள்,மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை தெரிந்த விடயமே. ஏன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இங்குள்ள சங்கங்கள், சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள், முன்னாள் அமைச்சரின் நியமனங்களின் தலைவர்கள் நிர்வாகத்தினரே செயற்படுகின்றனர்.

ஜனநாயக ரீதியில் உடனடியாக புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற ஆவண செய்ய வேண்டும். இப்போதுள்ள புதிய அமைச்சர். இந்திய மீனவர்களது எல்லை தாண்டிய மீன்பிடி மற்றும் எல்லை தாண்டிய மீன்பிடியின் போது கைது நடவடிக்கை இடம்பெறும் போது, இந்திய மீனவர்கள், கடற்படையினர் மீது சுடுதண்ணீர் கொண்டும் மிளகாய்த் தூள் விசிறியும் தாக்குதல் நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். உள்ளூர் இழுவைப் படகுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் இந்திய மீனவர்களது இழுவைமடித் தொழிலை கட்டுப்படுத்த முடியும்.

இந்த அரசும் கடந்த கால அரசாங்கத்தைப் போல் நடக்குமேயானால் இந்த அரசாங்கத்திற்கு எதிராகப் போராடா வேண்டிய நிலைக்குள் மீனவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

### மஹிந்த தேசப்பிரியவின்...

மேலும் வீட்டின் முன் கதவு உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்த தொலைக்காட்சி, எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட பல தளவாடங்களை திருடிச் சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

### இன்று க.பொ.த.உயர்...

இணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பரீட்சை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக பிரதேச மட்ட மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 40 இற்கு மேற்பட்ட விடைத்தாள் சேகரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை மண்டபங்களுக்குள் கையடக்க தொலைபேசி பாவனைக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரைத் தவிர உதவி மேற்பார்வையாளர், நோக்குனர்கள், பரீட்சார்த்திகள் எவருக்கும் அனுமதியில்லையெனவும் அவவாறான தொலைபேசி பாவனை கண்டுபிடிக்கப்படின் அது பறிமுதல் செய்யப்பட்டு குற்றவியல் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பரீட்சைத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மேற்படி பரீட்சை டிசம்பர் மாதம் 20 ம் திகதி முடிவடையும் எனவும் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் பரீட்சை மண்டபம் அமைந்துள்ள பாடசாலை வளாகம் வெளியாருக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக இருக்குமெனவும் இக்காலப்பகுதியில் மேலதிக வகுப்புக்கள், கருத்தரங்குகள் யாவும் தடை செய்யப்பட்டிருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக 117, 1911 ஆகிய துரித தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### நீர்கொழும்பு படகு...

ஆண்கள், நான்கு பெண்களுமே இந்த விபத்தில் சிக்கியவர்களாவர். காணாமல் போன இருவரை தேடும் பணிகள் நடைபெற்று வருவதாக நேற்று மாலை பொலிஸார் தெரிவித்தனர்.

### பொதுத் தேர்தல் :...

உள்ள அனைத்து வேட்பாளர்களும் தங்களது வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை மீறுவதாக அது அமைகின்றது.

# மனநலம் பாதித்த ஒரு தலைமுறையை புலமைப்பரிசில் பரீட்சை உருவாக்கும்

## கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி

(எம்.ஏ.அமீனுல்லா)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடருமானால், மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு தலைமுறை உருவாகும் அபாயம் ஏற்படுமென கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, சட்டத்தரணி பாலித பண்டார சுபசிங்க கூறுகிறார்.

தற்போது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பிள்ளைகளின் பரீட்சை அல்ல, பெற்றோரின் பரீட்சையாக மாறியுள்ளது. இந்நிலையில், மற்றொரு முறை பரீட்சை நடத்துவதால் குழந்தைகள் சந்திக்கும் அசௌகரியத்தை சிறிதும் உணராமல் பெற்றோர்கள் குழு ஒன்று உச்சநீதிமன்றம் சென்றுள்ளதாகவும் அவர் கூறினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, சட்டத்தரணி பாலித பண்டார சுபசிங்க,

14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பேசுகின்ற பொழுது, பல்வேறு மன நோய்களுக்கு சிகிச்சை பெறும் போக்கு அதிகமாக இருப்பது தெளிவாகிறது. மேற்படி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு பெற்றோர் மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் பலமான செல்வாக்குகளே குழந்தைகளைப் பலமாகப் பாதித்துள்ளது. திறமையான பிள்ளைகளை அதிக வசதிகளுடன் கூடிய பிரபல பாடசாலைகளில் சேர்வதற்கும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவி வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சை, தற்போது பிள்ளைகளை முற்றாக அடக்கும் ஒடுக்கும் பரீட்சையாக மாறியுள்ளது.



பெரு நகரங்களில் உள்ள பிரபல பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பிள்ளைகளை அனுப்புவதில் அதிக ஆர்வம் காணப்படுகிறது. ஆசிரியர்களின் வர்த்தக நோக்கங்கள் இதில் நடைமுறைப் படுத்தப்படுவது இரகசியமில்லை. குழந்தைகளை மனநோயாளிகளாக மாற்றும் இந்த பரீட்சையை இரத்து செய்ய அரசு கவனம் செலுத்த வேண்டும். மேலும் இதை அரசால் மட்டும் செய்ய முடியாது பெற்றோர்களும் இந்த ஆபத்தான நிலைமைகளை புரிந்து கொண்டு, அரசுக்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தற்போது புலமை பரீட்சை கல்வி உதவித்தொகை பெறும் நோக்கில் எந்த ஒரு குழந்தையும் பரீட்சைக்கு தோற்றுவதில்லை என சுட்டிக்காட்டிய அவர், அரசு பிள்ளைகளை அவர்களின் வயதுக்கு ஏற்றதாக இல்லாத போட்டிப் பரீட்சைக்கு அனுப்பாமல் பாடசாலைகளுக்கு இடையிலான முரண்பாடுகளை குறைக்க அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்:** புதிய ஒப்பந்தங்கள் கவர்ச்சிகரமாகத் தோன்றலாம்.

**ரிஷபம்:** பாதுகாப்பான முதலீட்டில் முதலீடு செய்தால் நல்ல பணம் சம்பாதிக்கலாம்.

**மிதுனம்:** கோபத்தை கட்டுப்படுத்துவதால் குடும்பத்தினரை காயப்படுதாமல் இருக்கலாம்.

**கடகம்:** பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு அதிகம். கவனம் தேவை.

**சிம்மம்:** குடும்பத்தினருடன் சமூக நிகழ்ச்சியில் பங்கேற்பது நலம் தரும்.

**கன்னி:** உங்களின் தனிப்பட்ட விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

**துலாம்:** இன்று நீங்கள் கொடுத்த பணத்தை நீங்கள் திரும்பப் பெருவீரகள்.

**விருட்சிகம்:** தேவையில்லாத சிந்தனைகள் மனதில் நிரம்பியிருக்கும்.

**தனுசு:** உடல்நலம் குறித்த பிரச்சினைகள் அசவுகரியத்தை ஏற்படுத்தலாம்.

**மகரம்:** ரியல் எஸ்டேட் மற்றும் பண பரிவர்த்தனைகளுக்கு நல்ல நாள்.

**கும்பம்:** ஊகங்கள் அல்லது எதிர்பாராத லாபங்களால் நிதி நிலைமை மேம்படு.

**மீனம்:** இன்று, நெருங்கிய நண்பரின் உதவியால் பணம் சம்பாதிக்க வாய்ப்புள்ளது.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** நவமி திதி அன்றைய நாள் முழுவதும் அதன் பிறகு நவமி திதி.
**நட்சத்திரம்:** பூரம் நட்சத்திரம் நாழி முழுவதும் அதன் பிறகு பூரம் நட்சத்திரம்.
**யோகம்:** சித்த அமிர்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** உத்திராடம், திருவோணம்.
**இராகு காலம்:** காலை 04:30 AM முதல் 06:00 AM வரை,
**குளிகை:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை.
**எமகண்டம்:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை.

# மருத்துவர் ஷாபியை விசாரித்த பொலிஸ் அதிகாரிகளிடம் வாக்குமூலம்

(கனூஷியா புஷ்பகுமார்)

நாட்டில் பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய குருணாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று மருத்துவர் சிரேஷ்ட வைத்திய நிபுணர் ஷிஹாப்தீன் மொஹமட் ஷாபியை கைது செய்யும் போது விசாரணைகளுக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள குற்றப் புலனாய்வு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இனங்களுக்கிடையே ஒற்றுமையின்மையை உருவாக்குவதற்காக திட்டமிட்டு போலியான கருத்துக்களை பிரசாரப்படுத்தி, தம்மைக் கைது செய்து துன்புறுத்தியமை மற்றும் போலியான ஆவணங்களைத் தயாரித்தமை தொடர்பில் மருத்துவர் ஷாபி, கடந்த 7ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் முறைப்பாடு அளித்திருந்ததைத் தொடர்ந்து குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுமார் 1000 தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரைகளை வழங்கிய குற்றச்சாட்டின் கீழ், கடந்த 2019ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி கைது செய்யப்பட்டமைக்கான சாட்சிகளும் முன்னதாகவே போலியாகத் தயாரிக்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு, மருத்துவரைக் கைது செய்வதற்காக சாட்சியாக அமைந்த அறிக்கைகளுள் 10 சாட்சியங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றில் 9 சாட்சியங்கள் முன்னதாகவே தயாரிக்கப்பட்டவை என தற்போது வரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், கடந்த 6ஆம் திகதி விசேட வைத்திய நிபுணர் ஷாபியை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் குருணாகல் நீதவான் நீதிமன்றம் விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சிறைச்சாலையில் கைதி ஒருவர் மரணம்

(கி.வசந்தன்)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம்(23) இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் கடந்த 19 ஆம் திகதி முதல் சிறைவைக்கப்பட்டிருந்தார். எதிர்வரும் 3 ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற இருந்த நிலையில் குறித்த நபர் மரணமடைந்துள்ளார். வவுனியா, செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 57 வயதான நபரே மரணமடைந்தவராவார்.

மரணமடைந்தவரின் சடலம் சிறைக்காவலர்களால் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதில் நீதவான் த.திருஅருள் சிறைச்சாலைக்கு சென்று சம்பவம் இடம்பெற்ற இடத்தை பார்வையிட்டதுடன், விசாரணைகளையும் நடத்தியிருந்தார். அத்துடன் வவுனியா வைத்தியசாலைக்கும் சென்று சடலத்தை பார்வையிட்டார்.

சட்ட வைத்திய அதிகாரியின் உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் கொல்லப்பட்டரா அல்லது தவறான முடிவெடுத்து மரணித்தாரா என்ற கோணத்தில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

# ஆயுதப்படையின் நினைவாக பொப்பி மலர் தினம் அனுஷ்டிப்பு



ஆயுதப்படையின் நினைவு தினம் – 2024 முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில், கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் அமைந்துள்ள இராணுவ வீரர்களின் நினைவு தூபிக்கு அருகில் நேற்று (24) முற்பகல் நடைபெற்றது.

# லாஃப்ஸ் எரிவாயு விநியோகத்தில் வீடுகளுக்கு முன்னுரிமை வழங்க

## ஜனாதிபதி பணிப்பு




நாடு முழுவதும் லாஃப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், வீடுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் 3,000 மெட்ரிக் டன் எரிவாயுவை, மாதாந்த அடிப்படையில் விநியோகம் செய்வதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

சமையல் எரிவாயு வழங்கும் முக்கிய நிறுவனங்களில் ஒன்றான லாஃப்ஸ் எரிவாயுவிற்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சமையல் எரிவாயு வழங்குநர் குறைந்தபட்சம் 7,500 மெட்ரிக் டன் எல்பி எரிவாயு இருப்பை கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்

உள்நாட்டு சந்தைக்கு எரிவாயு தட்டுப்பாடு இல்லாமல் விநியோகம் செய்ய இது அவசியமானது.

இந்தநிலையில், 9,000 மெற்றிக் டன் எரிவாயுவை லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் அடுத்த மூன்று மாதங்களுக்கு உள்நாட்டு விற்பனைக்கு அனுமதிக்கவேண்டும்.

இது கடந்த வெள்ளிக்கிழமை முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி 21 வரை நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா பயணிகளிடையே அதிக கவனம் ஈர்த்த நாடு இலங்கை

(கனூஷியா புஷ்பகுமார்)

உலகெங்கிலும் தனியாகப் பயணிக்கும் பயணிகளின், எதிர்வரும் ஆண்டுக்கான முன்பதிவு செய்யப்பட்ட முதல் பத்து பிரபலமான பயணத் தளங்களில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளதாக குடயளாியஉம சுற்றுலா நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இவ்வாண்டில் தனியாகப் பயணிக்கக் கூடிய பத்து பிரபலமான இடங்களில் இலங்கை முதல் இடத்தைப் பிடித்துள்ளதாக குறித்த அறிக்கை கூறுகிறது.

முன்னதாக, எதிர்வரும் ஆண்டுக்கான தரப்படுத்தலில் இலங்கை நான்காவது இடத்தைப் பெற்றிருந்ததுடன், சமீபத்திய தரப்படுத்தலில் நான்கு இடங்கள் முன்னேறி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கை இந்தியாவைப் போல் பெரியதாக இல்லாவிட்டாலும், இந்தியாவில் கிடைக்கும் அனைத்து அனுபவங்களையும் சலுகையான விலையில் இலங்கையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பது இவ்வாண்டு தரவரிசையில் நான்கு இடங்கள் முன்னேற முக்கியக் காரணம் என அறிக்கை தெரிவித்துள்ளது.



இலங்கைக்கு வருகை தருபவர்களுக்கு சீரான அனுபவம், கடற்கரைகள், சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த ஹோட்டல்கள் மற்றும் ஓய்வு விடுதிகள், சுவையான உணவுகள் உட்பட தனிப் பயணி ஒருவர் இலங்கையிலிருந்து எதிர்பார்க்கும் அனைத்தையும் பெற முடியும் என Flash Pack சுற்றுலா நிறுவனம் தெரிவித்துள்ளது.2025 ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை ஜப்பான் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## சீனாவை நோக்கித் தமிழர்கள் செல்வது ஏன்?

பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்திய - அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களில் கற்றவர். எடின்பரோ பல்கலைக் கழகத்தில் சமூக மானிடவியலில் கலாநிதி பட்டத்தையும் பெற்றவர். மேற்கு நாடுகள் சார்ந்த உலகமயமாக்கல், மேம்பாடு ஆகிய துறைகளில் ஆய்வு நூல்களை வெளியிட்டுமிருக்கிறார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் மைய - இடதுசாரிப் பிரிவின் ஒரு பகுதியாகச் செயற்பட்டும் வருகிறார்.

அத்துடன், இந்திய வெளியுறவுக் கொள்கை, ரஷ்ய - சீன கூட்டு, இந்தியாவின் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான கூட்டு ஆகியவற்றையும் நன்கு அறிந்த ஒருவர்தான் ஹரிணி.

ஆகவே, ஜனாதிபதி அநுர, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் உள்ளக அரசியல் நிலைமைகளை சீர்செய்யும் நோக்கில் இந்தியா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் சமாளிக்கக்கூடிய வியூகங்களை வகுப்பதுடன் சீனாவிடம் இருந்து முதலீடுகளையும் எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதிலும் பிடி கொடுக்க முடியாத அரசியல் - பொருளாதார பொறிமுறைகளை நாடுகிறார் என்பது கண்கூடு.

ஹரிணியியை பிரதமராக நியமித்தன் மூலம் அது வெளிப்படுகிறது. இப் பின்னணியில், ஈழத் தமிழர்களின் மதிநுட்பங்கள் என்ன என்ற கேள்வி முக்கியமானது. குறிப்பாக 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இருந்து, 2024 வரை 15 ஆண்டுகளிலும் அமெரிக்க - இந்திய அரசுகளினால் எவ்வாறு கையாளப்பட்டு வந்தார்களோ அதேபோன்றதொரு கையாளப்படும் வியூகங்களுக்குள் அவர்கள் மீண்டும் சிக்குண்டுள்ளனர், அல்லது தெரிந்து கொண்டு, ஏதுவும் நன்மைகள் கிடைக்கும் என்ற ஆபத்தான நம்பிக்கைகளுடன் செயற்படுகின்றனர் போல் உணர முடிகிறது.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்க முடியாது என்று ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோஹண எழுதிய நூலில் தெளிவாக உண்டு. ஆனால், இப்போது ஜேவிபி இல்லை அது தேசிய மக்கள் சக்தியாக மாறியுள்ளது. தாராள ஜனநாயகக் கொள்கையோடு சமத்துவம் - சோசலிஷம் என்பதை மையமாகக் கொண்டது என்று ஜேவிபியின் தமிழ் ஆதரவாளர்கள் வியாக்கியானம் செய்யக் கூடும்.

ஆனால், அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சி அமைத்துள்ள சூழலில், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனும் இந்தியா - சீனா அரசுகளுடனும் சமாந்தரமாகப் பயணிக்க வேண்டும் என்ற கொள்கைகள் அநுரவினால் வகுக்கப்பட்டு வருவதற்குக் காரண - காரியங்கள் உண்டு.

அதாவது, பௌத்த தேசியவாத மற்றும் இலங்கை இராணுவக் கட்டமைப்புகளுடன் பின்னிப் பிணைந்ததாகவே அது இருக்கும். வடக்கு, கிழக்கு அதன் பிரதான உள்ளடக்கமாக இருக்கும் என்பது வெளிப்படை.

சந்திரிகா, ரணில், மகிந்த ஆகியோர் வகுத்த திட்டங்களின் நீட்சிதான் இது. ஆனாலும், ஜேவிபி என்ற அரசியல் கட்டமைப்பின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தியின் மைய - இடதுசாரி பிரிவு, தற்போது ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு வகுக்கும் வியூகங்கள் முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கும்.

2009 போரின் பின்னரான காலத்தில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தேவைப்பாடுகளுடன் இந்திய - சீன அரசுகளின் ஒத்துழைப்புகள் ஆகியவற்றுடன் கூடிய வியூகங்களை முன்னைய ஆட்சியாளர்கள் சரியாக வகுக்கத் தவறியள்ளனர் என்பது ஜேவிபியின் பிரதான குற்றச்சாட்டு.

இந்த இடத்திலேதான் அநுரவின் கொள்கை விளக்கவுரையின் பின்னர் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதாச, முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளை தேசிய மக்கள் சக்தியும் பின்பற்றுவதாக குற்றம் சுமத்தியிருக்கிறார்.

அதேநேரம், ரணில் - சஜித் இரு அணிகளாகப் பிரிந்திருந்தாலும் அந்த அணியில் உள்ளவர்கள் தற்போது ஒன்றுசேர்ந்து தேசிய மக்கள் சக்தியின் மைய - இடதுசாரிக் கொள்கைகளுக்கு ஈடான - ஆனால், இடதுசாரிச் சாயம் அற்ற நிலையில் வியூகங்களை வகுக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

ஆனால், தமிழ்த் தரப்பு சீனாவை நோக்கிச் செல்வது போன்றதொரு அவதானிப்பு மிகச் சமீப நாட்களாக வெளிப்படுகின்றது. யாழ்ப்பாணத்துக்குச் சென்ற கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் கீ சென்ஹொங்கிடம், நம்ப முடியாத அளவுக்கு தமிழர்கள் பொருளாதார உதவிகள் மற்றும் முதலீடுகளை கோரியிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் சீனா யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவிருந்த சில அபிவிருத்திகள் இந்தியத் தலையீட்டின் காரணமாக தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்த்தமையினால் கைவிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் நடந்த இரு சந்திப்புக்களிலும் அது பற்றிச் சுட்டிக்காட்டியிருந்த சீனத் தூதுவர் அந்த துயரமான அனுபங்களுடன் மீண்டும் அவ்வாறான உதவிகளை செய்யத் தயங்குவதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆகவே, சீனத் தூதுவர் எதிர்பார்க்காத அளவுக்கு சில தமிழ் தரப்பினரால் விடுக்கப்பட்ட சீன அபிவிருத்திகளுக்கான கோரிக்கைகளின் பின்னால், தேசிய மக்கள் சக்தி இருக்கக் கூடிய வாய்ப்புகள் இல்லாமில்லை.

இந்தியா மாத்திரமல்ல, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடனும் உறவைப் பேண வேண்டும் என்ற கருத்தை இந்த ஆசிரியர் தலையங்கத்தின் ஆசிரியர் ஏலவே எழுதியிருக்கிறார். ஆனால் அநுரவின் ஆட்சியில் விடுக்கப்படும் சீனக் கோரிக்கைகளில்தான் சந்தேகங்கள் எழுகிறது.

ஆகவே, இந்தோ - பசுபிக் பிராந்தியம் உள்ளிட்ட சர்வதேச அணுகுமுறைகளில் தமிழர்களுக்கு என்று தனித்துவமான புவிசார் அரசியல் கொள்கைகளை வகுக்காமல் அவ்வப்போது மாறிவரும் அரசாங்கங்களின் திட்டங்கள் அல்லது அமெரிக்க - இந்திய அரசுகளின் தேவைகளுக்குப் பின்னால் அணி வகுக்கும் கலாசாரம் நீக்கம் செய்யப்பட வேண்டும்.

ஜேவிபி தமது அடிப்படைக் கருத்தியலில் எந்தவொரு விட்டுக் கொடுப்பும் இல்லாமல், ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் இந்திய - சீன அரசுகளையும் கையாள முற்படுவதை அனுபவப் பாடமாக நோக்க வேண்டும்.

ஆனால், எண்பது வருட அரசியல் போராட்டம் நடத்திய தமிழ்ச் சமூகம், 2009 இற்குப் பின்னரான சூழலில் கையாளப்படும் இனமாகவும் கொழும்பு மைய அரசியலுடன் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை சிதைப்பதற்கு வழிவிடக்கூடிய வெளிச் சக்திகளின் வியூகங்களுக்குப் பலியாவதும் மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறு.

# அணு ஆயுத மிரட்டல்:
# புது வடிவம் எடுக்கும் ரஷ்யா - யுக்ரேன் போர்

ரஷ்யாவிற்கும் யுக்ரேனுக்கும் இடையிலான மோதல் கடந்த ஒரு வாரத்தில் நிகழ்ந்த சில முக்கியமான மாற்றங்களால், சர்வதேச அரங்கில் முன்னெப்போதையும் விட அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ரஷ்யா-யுக்ரேன் மோதல் அதன் 1000 வது நாளைக் கடந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில், மேற்கத்திய நாடுகள் யுக்ரேனுக்கு வழங்கும் ஆயுதங்களின் எண்ணிக்கையை கணிசமாக உயர்த்தியுள்ளன. அதே சமயம் ரஷ்யா அணுஆயுத தாக்குதல் பற்றிய அச்சுறுத்தல்களை விடுத்தது.

கடந்த வார நிகழ்வுகளும் அவற்றின் தாக்கங்களும் இந்த கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவுக்குள் யுக்ரேன் எங்கெல்லாம் தாக்கலாம்?

அமெரிக்க ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவுக்குள் தாக்குதல் - அணுசக்தி கொள்கையில் முக்கிய மாற்றம் செய்த புதின்.

ரஷ்யா - யுக்ரேன்: ஒரே நாளில் போர் நிறுத்தப்படும் என டிரம்ப் உறுதி - அமைதி பேச்சுவார்த்தைக்கு என்ன வாய்ப்பு?

அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் ஆட்சிக் காலம் முடிவுக்கு வர சில வாரங்களே இருக்கும் நிலையில், அவர் ரஷ்யா - யுக்ரேன் போரில் அமெரிக்கா கடைபிடித்து வந்த கொள்கையில் முக்கிய மாற்றத்தை அறிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியான தகவலின்படி, ரஷ்யாவிற்குள் உள்ள இலக்குகளைத் தாக்க நீண்ட தூர 'ATACMS' ஏவுகணைகளைப் பயன்படுத்த அமெரிக்கா யுக்ரேனுக்கு அனுமதி அளித்ததாகக் கூறப்பட்டது.

இந்த நடவடிக்கை அமெரிக்காவின் ஒரு பெரிய கொள்கை மாற்றத்தை பிரதிபலித்தது. இதற்கு முன்னதாக, அமெரிக்கா கொடுத்த நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தி ரஷ்யாவின் உட்பகுதிக்குள் தாக்குதல் நடத்த யுக்ரேனுக்கு அமெரிக்கா அனுமதி வழங்கவில்லை. கடந்த பல மாதங்களாக தனது எல்லைக்கு அப்பால் நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்துவதற்கு யுக்ரேன் முன்வைத்த கோரிக்கைகளையும் பைடன் நிர்வாகம் நிராகரித்து வந்தது. தற்போது அமெரிக்கா அதன் கொள்கையை மாற்றி கொண்டு, யுக்ரேனுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அமெரிக்கா அனுமதி அளித்ததாக பத்திரிகைகளில் செய்தி வெளியான சில மணி நேரத்தில், ரஷ்யாவின் பிரையன்ஸ்க் பகுதியில் யுக்ரேன் நீண்ட தூர ஏவுகணைகளை ஏவியது.

ரஷ்யாவின் கூற்றுப்படி, பிரையன்ஸ்க் பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் யுக்ரேன், அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை (ATACMS) பயன்படுத்தியது. 6 ஏவுகணைகள் ஏவப்பட்டன. அதில் ஐந்து ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஒன்று சேதமடைந்தது. பெயர் வெளியிட விரும்பாத அமெரிக்க அதிகாரிகள் சிலர் கூறிய தகவலின்படி, எட்டு ஏவுகணைகள் ஏவப்பட்டதில் இரண்டு இடைமறிக்கப்பட்டன. ஏவுகணைகளின் எண்ணிக்கை உறுதியாக தெரியவில்லை என்றாலும்கூட, ரஷ்யா - யுக்ரேன் மோதலின் ஒரு பகுதியாக அமெரிக்கா தயாரித்த ஏவுகணைகள் முதன்முறையாக ரஷ்ய எல்லையைத் தாக்கியது ஒரு வரலாற்றுத் தருணமாக கருதப்படுகிறது.

அதன்பின்னர் புதன்கிழமை, யுக்ரேன் ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் உள்ள ரஷ்ய இலக்குகளை நோக்கி, பிரிட்டன் வழங்கிய ஸ்டோர்ம் ஷேடோ (Storm Shadow) என்ற ஏவுகணைகளை செலுத்தியது. அங்கு சுமார் 600 சதுர கிமீ (232 சதுர மைல்) ரஷ்ய பகுதி யுக்ரேன் படைகளின் வசமுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வாரத்தின் பிற்பகுதியில், பைடன் யுக்ரேனில் கண்ணிவெடிகளைப் (anti-personnel landmines) பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்ததன் மூலம் யுக்ரேனின் ஆயுத பலத்தை மேலும் அதிகரித்தார்.

கண்ணிவெடிகள் ரஷ்யா-யுக்ரேன் போரில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் மிகவும் எளிமையான, சர்ச்சைக்குரிய, அதே சமயம் போரில் மிகவும் பயனுள்ள ஒரு அயுதம்.

யுக்ரேனின் கிழக்கு போர் முனையில் இந்த கண்ணிவெடிகள் பாதுகாப்பின் ஒரு முக்கிய அங்கமாகப் பார்க்கப்படுகிறது. அவற்றின் பயன்பாடு ரஷ்யாவின் முன்னேற்றத்தை தாமதப்படுத்த உதவும் என்று நம்பப்படுகிறது.

ஆக, மூன்று விரைவான முடிவுகளுடன், யுக்ரேனுக்கான அதன் ஆதரவு மறைந்துவிடப் போவதில்லை என்பதை மேற்கத்திய நாடுகள் இந்த உலகிற்கு உணர்த்தியுள்ளன.

யுக்ரேனின் ராணுவ வலிமையை அதிகரிக்க மேற்கத்திய நாடுகள் இந்த வாரம் நடவடிக்கை எடுத்த நிலையில், ரஷ்யா அதற்கு பதிலடி



கொடுக்க முற்பட்டது.

ரஷ்யா-யுக்ரேன் போரின் 1000வது நாளான செவ்வாயன்று, புதின் ரஷ்யாவின் அணுசக்தி கொள்கையில் மாற்றங்களைச் செய்தார்.

அந்த அணுசக்தி கொள்கை, ரஷ்யா அணு ஆயுதத்தைப் எப்போது பயன்படுத்தலாம் என்று முடிவு செய்வதற்கான வரையறைகளை அளிக்கிறது.

அதன்படி, அணுசக்தி இல்லாத நாட்டின் தாக்குதலின் பின்னணியில், அணுசக்தி கொண்ட நாடு இருந்தால் அது, ரஷ்யா மீதான கூட்டுத் தாக்குதலாகக் கருதப்படும் என்று ரஷ்யாவின் மாற்றப்பட்ட புதிய கொள்கை கூறுகிறது.

அடுத்த நடவடிக்கையாக, யுக்ரேனின் நீப்ரோ நகரை தாக்க ரஷ்யா ஒரு புதிய வகை ஏவுகணையை பயன்படுத்தியது. அதன் பெயர் “ஓரேஷ்னிக்“ (Oreshnik). இது ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் செல்லும் திறன் கொண்டது என்றும், “இந்த ஏவுகணையை எந்தவொரு வான் பாதுகாப்பு அமைப்பாலும் இடைமறிக்க முடியாது“ என்றும் புதின் கூறினார்.

இந்த போரை கவனித்து வரும் பெரும்பாலான வல்லுநர்களின் கருத்துப்படி, இந்த புதிய ஏவுகணை பற்றிய அறிவிப்பு ஒரு எச்சரிக்கையை அனுப்பும் நோக்கிலானது. அதாவது, ரஷ்யா விரும்பினால் இந்த புதிய ரக ஏவுகணையில் அணு ஆயுதத்தை பொருத்தி ஏவ முடியும்.

ரஷ்யா தரப்பில் இருந்து வரும் இதுபோன்ற எச்சரிக்கைகள், ஒரு காலத்தில் மேற்குலகில் தீவிர கவலையை ஏற்படுத்தியது. ஆனால் இப்போது அப்படி இல்லை.

ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யா-யுக்ரேன் மோதல் தொடங்கியதிலிருந்து, புதின் அடிக்கடி அணுசக்தி ஆயுதங்களை தொடர்பான “சிவப்பு கோடுகளை“ வரையறுத்து வந்துள்ளார். அவற்றை மேற்கு நாடுகள் மீண்டும் மீண்டும் கடக்கின்றன.

மேற்கத்திய தலைவர்கள் ரஷ்யாவின்




அணுசக்தி அச்சுறுத்தல்களை பெரிதாக எடுத்து கொள்ளாததற்கு மற்றுமொரு முக்கிய காரணம் ஹசீனா“.

அமெரிக்கா மற்றும் பிற நாடுகளால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தை குறைக்கும் முயற்சிகளில் ரஷ்யாவிற்கு சீனா ஒரு முக்கிய பங்காளியாக மாறியுள்ளது.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் சீனாவின் எதிர்வினை ரஷ்யாவுக்கு பாதகமாக இருக்கும் என மேற்கு நாடுகள் நம்புகின்றன. இதனால் அணு ஆயுதத்தைபயன்படுத்துவது தொடர்பாக புதின் விடுக்கும் அச்சுறுத்தல்கள் நிஜமாக சீனா அனுமதிக்காது என மேற்குலகம் நம்புகிறது. அமெரிக்காவின் அடுத்த அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டொனால்ட் டிரம்ப், வரும் ஜனவரி 20 அன்று அதிகார பூர்வமாக வெள்ளை மாளிகைக்குள் அடி எடுத்து வைக்கிறார். பரப்புரையின் போது, “24 மணி நேரத்திற்குள்“ ரஷ்யா-யுக்ரேன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக டிரம்ப் சபதம் செய்தார்.

துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜேடி வான்ஸ் போன்ற அவருக்கு நெருக்கமானவர்கள், டிரம்ப் என்ன செய்வார் என்பதை பற்றி மேலோட்டமாக சுட்டிக்காட்டியுள்ளனர். டான்பாஸ் மற்றும் கிரைமியா பிரதேசங்களை ரஷ்யாவுக்கு விட்டுக்கொடுத்து யுக்ரேன் சமரசம் செய்ய வேண்டி இருக்கலாம் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


இது பைடன் நிர்வாகத்தின் நிலைப்பாட்டிற்கு எதிரானது. பைடன் நிர்வாகத்தின் தற்போதைய துரிதமான செயல்பாடுகள், டிரம்ப் பதவிக்கு வருவதற்கு முன்பு முடிந்தவரை யுக்ரேனுக்கு அதிக உதவிகளை வழங்கும் அதன் விருப்பத்தை சுட்டிக்காட்டுகின்றன.

யுக்ரேன் அதிபர் வோலோதிமிர் ஜெலென்ஸ்கி, 2025-ஆம் ஆண்டில் ராஜதந்திர வழிமுறைகள் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவர யுக்ரேன் விரும்புவதாக அண்மையில் கூறினார். யுக்ரேனின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா இந்த வாரம் பிபிசியிடம் பேசுகையில், “டிரம்பின் ஒரே உந்துதல் அவரது சக்தி மற்றும் அதிகாரத்தை நிரூபிப்பதாக இருக்கும். முந்தைய அதிபர் பைடன் சரி செய்யத் தவறிய பிரச்னைகளை அவர் சரிசெய்யும் திறனை காட்டவும் நினைப்பார்“ என்றார். “ஆப்கானிஸ்தானில் கிடைத்த தோல்வியால் பைடன் நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கை பற்றிய பிம்பத்தை பாதித்தது. நீங்கள் கூறுவது போன்ற நிலையை டிரம்ப் ஏற்றுக்கொண்டால், யுக்ரேன் அவரது ஆட்சிக்கான ஆப்கானிஸ்தானாக மாறும், அதேபோன்ற மோசமான விளைவுகளுடன்..“ என்று குலேபா கூறினார்.

“ஆகவே, அவர் அதை செய்யமாட்டார் என்று நம்புகிறேன்.“ என்று அவர் தெரிவித்தார்.

இந்த வார நிகழ்வுகள், போர் கட்டுப்பாட்டை மீறி எல்லை கடந்து போவதற்கான தொடக்கமாக இல்லாமல் போகலாம். அதே சமயம் யுக்ரேன் - ரஷ்யா மோதலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான எதிர்கால பேச்சுவார்த்தைகள் மற்றும் நிலைப்பாட்டை முன்னெடுக்கும் ஒரு தொடக்கமாக அமையலாம்.

**பால் ஆடம்ஸ் மற்றும் டாம் பென்னட்**
நன்றி பிபிசி தமி



# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 99வது ஜனன தினம்





பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 99வது ஜனன தின பெருவிழா சனிக்கிழமை கொழும்பு-13 புதுச் செட்டித் தெரு, சாயி நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது சாயி நிலையத் தலைவர் எஸ். என். உதயநாயகம் ”பிரசாந்தி” கொடியேற்றி வைப்பதையும்.

பிறந்தநாள் “கேக்” வெட்டுவதையும், தொடர்ந்து மங்கள ஆராத்தியையும் கலந்து கொண்ட சாய் பக்தர்களையும் காணலாம்.





# ஹிஜாபுக்கு துணி வேண்டுமென அமைச்சரவையில் கேட்டது நானே

2004 ஆம் ஆண்டு நான் அமைச்சரவை அமைச்சராக இருந்தேன். அப்போது முஸ்லிம் மாணவிகளின் ஹிஜாபுக்கு துணி வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரவைப் பத்திரம் போட்டது நானே.அந்த நேரம் முஸ்லிம் அமைச்சர்களும் இருந்தனர்.

இவ்வாறு வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அக்குறணையில் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில், அமைச்சர் விஜித ஹேரதிடம் அங்குவருகை தந்த பிரமுகர்களால் பல கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அதற்கு



பதிலளித்து தொடர்ந்தும் அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றுகையில்,

தமது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பிரதி சபாநாயகர் முஸ்லிம்,தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் ஒரு முஸ்லிம்,மேல் மாகாண ஆளுநர் முஸ்லிம்.இவ்வாறு இருக்கையில் அம்பாறை மாவட்டத்தில் என்.பிபி சார்பில் ஒரு முஸ்லிம் எம். பி இல்லை என்று நினைத்தே ஆதம்பாவாவை தேசிய பட்டியலிலிருந்து நியமித்தோம்.

எமது அரசாங்கம் இனக்குழுக்களாகப் பிரிந்து மக்களை ஆட்சி செய்வதில்லை. சில அரசியல்வாதிகள் முஸ்லிம் மக்களை உசிப்பேற்றுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்படமாட்டாதெனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# அஸ்வெசும நலன்புரி திட்டம்; டிசம்பர் 2 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்

அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக மேலதிக கால அவகாசத்தை வழங்குவதற்கு நலன்புரி சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, முன்னதாக விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் இன்று 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என அதன் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் , அஸ்வெசும நலன்புரி திட்டப் பயனாளர்களுக்கான குறைகளைச் சமர்ப் பிப்பதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வரை குறைபாடுகளைத் தெரிவிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் 17 இலட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், நன்மைகளை எதிர்பார்த்து இரண்டாம் கட்டமாக 455,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் நலன்புரி நன்மைகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

# பரீட்சை நிலையங்களில் தொலைபேசிக்கு தடை

இன்று நாடுபூராகவும் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் போது, உதவி அதிபர்கள் அல்லது ஊழியர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்காணிப்பாளர்களுக்கு மாத்திரமே பரீட்சை நிலையங்களில் கைத்தொலைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு



இலங்கைக்கு இம்மாதம் நவம்பர் முதல் 20 நாள்களில் 120,961 சுற்றுலாப் பயணிகள் வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதம் இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அந்த எண்ணிக்கை 26,717 ஆகும்.

அதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 17 இலட்சத்து 41 ஆயிரத்து 676 ஆகும்.

இந்தநிலையில், கடந்த வருடம் இலங்கை வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 14 லட்சத்து 87 ஆயிரத்து 303 என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# அனர்த்தம் தொடர்பாக ஆராயும் அவசரக் கூட்டம்



அனர்த்த காலங்களில் காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பாக ஆராயும் அவசர கூட்டம் சனிக்கிழமை (23) அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அவசர நிலைமைகள் மற்றும் அனர்த்தங்கள் ஏற்படும் போது பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அவசர உதவிகள் மற்றும் பாதுகாப்புக்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன் அனைத்து நிலைகளிலும் எவ்வாறு ஆயத்தமாவது தொடர்பாகவும் முன்னெடுக்கப்பட்டு தயார் நிலையில் வைத்துக் கொள்வது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பொதுத் தேர்தல் கடமை: கொடுப்பனவு விபரங்களை வெளியிட்டது ஆணைக்குழு

முகம்மட் முக்தார்

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், தேர்தல் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவு தொடர்பான சுற்றுநிருபம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சுற்று நிருபத்திற்கமைய வாக்குப்பெட்டி, விநியோகம், மீள பொறுப்பேற்றல், தேர்தல் தினத்தன்று கடமை, வாக்கெண்ணும் கடமை என்பவற்றுக்காக மூன்று வகுதிகளின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

தேர்தலுக்கு முதல்நாள் வாக்குப்பெட்டி விநியோகக் கடமையில் ஈடுபட்டோருக்கான விபரத்தின் படி, உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 2000 ரூபா, சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 1600 ஷரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 1250 ரூபா உதவியாளருக்கு 1000 ரூபா வழங்கப்படும்.

தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபட்டோருக்காக, வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு 6000 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 6,000 ரூபா, மேலதிக தலைமை தாங்கும் அலுவலருக்கு 5,000 ரூபா, விசேட, மேலதிக, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 3500 ஷரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 3250 ரூபா, உதவியாளருக்கு 3000 ரூபா வழங்கப்படும்.

வாக்கெண்ணும் கடமையில் ஈடுபட்டோருக்கான விபரமத்தில், பிரதம வாக்கெண்ணும் அலுவலருக்கு 15,000 ரூபா பிரதி வாக்கெண்ணும் அலுவலருக்கு 12,000 ரூபா, உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு 10,000, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 6,000 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 4,000 ரூபா உதவியாளருக்கு 3000 ரூபா வழங்கப்படும்.

இது தவிர இணைந்த படியாக ஆகக் குறைந்தது 1500 ரூபாவும் ஆகக்கூடுதலாக 5000 ரூபாவும் வழங்கப்படுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது.

தாமோதரம் சுதாகரன்



# வடகிழக்கில் சூறாவளி: ஏற்படவிருக்கும் பேராபத்து..!



இலங்கையை இறுதியாக கடந்த 2016 ஆம் ஆண்டு தாக்கிய ரோனு புயலுக்கு பின்னர் பாரிய அளவிலான புயல் தாக்கம் எதுவும் ஏற்படாத நிலையில், நேற்று 23ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களை பாரிய அளவில் தாக்க கூடிய வகையில் உருவாகிவரும் இன்னும் பெயரிடப்படாத பாரிய சூறாவளி ஒன்று தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது .

இலங்கை, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் இலங்கை வானிலை அவதான நிலையம் என்பன இணைந்து வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை இன்னும் நான்கு நாட்களுக்கு நீடிக்கும் சாத்தியம் காணப்படுவதாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது . அத்துடன் நேற்று முதல் அம்பாறை மாவட்ட கரையோர பிராந்தியத்தில் இது உருவாவதால் பற்றிய காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி எதிர்வரும் 25ம்,26ம் திகதிகளில் கிழக்கில் அதிகளிவு மழை வீழ்ச்சி ஏற்படும் அதேவேளை பாரிய சூறாவளியாக மாற்றம் பெற்று 27 ,28 ஆம் திகதிகளில் இலங்கையின் கிழக்கு பகுதியை தாக்கி பின்னர் வடக்கு நோக்கி நகர்வதுடன் இந்தியாவின் புதுச்சேரி பதுதியில் 28ஆம் திகதி கரையை கடக்கும் என கூறப்படுகின்றது.

அத்துடன் மேற்படி புயலானது எப்பகுத்தியில் கரையை கடக்கும் என்பது தொடர்பில் இதுவரை எதுவித திட்ட வட்டமான அறிவிப்பையும் வெளியிட முடியாது எனவும். பின்னர் இது மாற்றமடைவதுக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த காற்றழுத்த தாழ்வு மடலத்தின் 19 மாதிரிகள் இதுவரை கிடைக்கப்பற்றுள்ளதாகவும், அவைகள் அனைத்திலும் மேற்படி நிலைமை மிகவும் வலுவாக உருவாவதையே அவதானிக்க கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, நேற்று இரவு முதல் கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் பெய்து வரும் மழை காரணமாக கிழக்கில் இதுவரையில் மக்கள் இடம் பெயர்வுகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் எதிர்வரும் நாட்களில் அனர்த்த மத்திய நிலையத்தின் அறிக்கையை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் இதுவரை இல்லாத அளவு 200-300 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும், இதனால் மீனவர்களை கடலுக்கு செல்வதை தவிக்கும்படி அறிவுறுத்தப்படுவதுடன், நீண்டநாள் மீன்பிடிக்காக ஆழ்கடலுக்குச் சென்றவர்களை உடன் கரைக்கு திரும்பும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும், காற்றின் அதிக வேகம் காரணமாக கடலில்தோன்றும் பாரிய அலை காரணமாக அது மேலெழும் சாத்தியம் காணப்படுவதால் நிலப்பகுதிக்குள் கடல் நீர் வருவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் இதனால் கிழக்கு மாகாணத்தில் கடற்கரையோரத்தில் வசிக்கும் மக்களை மிக மிக அவதானத்துடன் இருக்குமாறும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .


இலங்கையை கடந்த 2016ஆம் ஆண்டு தாக்கிய ரோனு புயலுக்கு பின்னர் ஏற்படவுள்ள இன்னும் பெயர் சூட்டப்படாத மேற்படி புயலை பற்றிய செய்தியே தற்போது அதிகம் பேசுபொருளாக மாறியுள்ளது. ரோனு புயலை பொறுத்தவரை இது இந்தியாவின் கிழக்குக் கடற்கரை மற்றும் இலங்கை கடற்கரையிலேயே மிகக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 2016ஆண்டின் சூறாவளிப் பருவத்தின் முதல் புயலாக இது அமைந்திருந்தது . ரோனு இலங்கையின் தென்பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகத் ஆரம்பமாகி வடக்கு நோக்கி நகர்ந்து மே 19இல் புயலாக மாறியது; தரைபகுதியைக் கடந்ததால் வலுவிழந்த மேற்படி புயலானது பின்னர் இது மீண்டும் வலுவுற்று வங்காளதேச கடற்கரையை நோக்கி நகர்ந்திருந்தது.


ரோனு புயலால் இலங்கையில் குறைந்தது 71 பேர் உயிரிழந்துடன் வடகிழக்கு திசையில் நகர்ந்ததால் வங்காளதேசத்தின் கடற்கரையில் நிலப்பகுதியை அடைந்திருந்தது.

மேற்படி புயலானது இலங்கையில் குறைந்த காற்றழுத்தப் பகுதியாக உருவானவுடனேயே இலங்கையின் வானிலை அவதான நிலையம்கடந்த 2016ஆம் ஆண்டு மே13அன்று எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதில் மீனவர்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். பின்னர், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன மானது பதுளை, மொனராகலை, கண்டி, இரத்தினபுரி, குருணாகல், நுவரெலியா, கேகாலை, மாத்தளை மாவட்டங்களில் நிலச்சரிவுகள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுத்தது. அத்தோடு இலங்கையின் இடர் முகாமைத்து மத்திய நிலையமானது 2016 மே 16 அன்று வெள்ள எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டிருந்தது .

அதில் களனி கங்கையும் மகா ஓயாவும் கனமழையால் வெள்ளப் பெருக்கெடுத்தன. புயல் தாக்கத்தால் இலங்கையில் பெருமழை பெய்தது. இதனால் விளைந்த வெள்ளத்திலும் நிலச்சரிவுகளிலும் 37 பேர் உயிரிழந்தும் தவிரவும் புயலால் 134,000 மக்கள் வீடிழந்ததும், 2016 மே 21 வரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 71ஆக இத்துடன் குறைந்தது 127 பேர் காணாமல் போயுயினர். அதேபோன்றதொரு எச்சரிக்கை அறிக்கை ஒன்றே தற்போதும் வெளியிடப்பட்டுள்ளது. எனவே கிழக்கு வாழ் மக்களே, ஒரு வெள்ள மற்றும் சூறாவளி அனத்தத்துக்கு முகம் கொடுக்கும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஏனெனில், இலங்கையின் பருவகால மழைவீழ்ச்சியினால் வருடம் தோறும் பாதிக்கப்படும் மாகாணமாக கிழக்கு மாகாணமே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இயற்க்கை அனர்த்தங்கள் தொடர்பில் பாடப்புத்தகங்களில் குறிப்பிடும்போது இயற்கை அனர்த்தங்களால் அதிகமாக பாதிக்கப்படுவது கிழக்கு மாகாணம் என குறிப்பிடப்படுவது வழக்கம். இதற்கு உதாரணமாக 1956களில் கிழக்கில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, 1978 களில் வீசிய சூறாவளி, 2004 இல் ஏற்பட்ட பாரிய ஆழிப்பேரலை என்பவற்றால் அதிகமாக பாதிக்கப்பட்டதும் கிழக்கு மாகாணமே.

அத்துடன் 1978 இல் கிழக்கில் வீசிய பாரிய சூறாவளியினால், அண்ணளவாக 1000 பேர் மரணித்தும், ஒரு மில்லியனுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதுடன், சுமார் 250,000 வீடுகள் முற்றாக அல்லது பகுதியாக சேதமாக்கப்பட்டு, 240 பாடசாலைகளும் சேதமடைந்தன. அத்துடன் மட்டக்களப்பின் ஐந்தில் ஒரு மீன் பிடிப்படகுகள் அழிக்கப்பட்டு, 11 இல் 9 நெல் சேமிப்பு களஞ்சியங்கள் அழிக்கப்பட்துடன், மட்டக்களப்பில் 90 வீதமாக தென்னம் பயிர்ச் செய்கை (28,000 ஏக்கர்) சேதத்திற்குள்ளாகின. இவற்றை சரி செய்ய பின்னர் அப்போதைய அரசாங்கம் சுமார் அரசாங்கம் 600 மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

மேற்படி அனர்த்தங்கள் ஒவ்வொரு வருடமும் இலங்கையை பாதிப்பதற்கு பூகோளத்தில் இலங்கையின் அமைவிடமே முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றது. ஏனெனில், இலங்கையைச் சுற்றி கடல் காணப்படுவதும், நம்நாடு சிறியதொரு தீவாகஇருப்பதுடன் வங்காள விரிகுடாவின் வாய்க்குள் இலங்கையின் கிழக்குப் பகுதி அமைந்து காணப்படுவதும், அத்துடன் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் நீர்ப்பரப்புகளே அதிகமாக காணப்படுகின்றமையுமே இலங் கையின் பல்வேறு பகுதிகளிலும் இயற்க்கை அனர்த்தங்கள் ஏற்பட காரணமாகும்.

## 1978 சூறாவளியின் பாதிப்புக்கள் சில..!









கிழக்கை பொறுத்தவரை வெள்ளப்பெருக்கு என்பது டிசம்பர் தொடக்கம் பெப்ரவரிவரை பெய்யும் மாரிமழையில் மட்டுமே ஏற்படுவது வழக்கம். அவ்வாறான தொடர் மழையின் போதுதான் வெள்ளநீர் தேங்கி நிற்பதை நாம் கண்டிருக்கின்றோம். ஆனால் அந்த நிலையானது தற்போது மாற்றத்துக்குள்ளாகி ஒருநாள் பெய்த மழையிலேயே கிழக்கு மாகாணம் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கி விடுவதும் அதனால் மக்கள் தங்கள் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டு இடம்பெயர்வதையும் பலமுறை அவதானித்துவிட்டாகிவிட்டது .

இதற்கெல்லாம் காரணம் அபிவிருத்தி என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட கொங்ரீட் வீதிகளே அதிமாக செல்வாக்கு செலுத்துகின்றன .

ஏனெனில் அவ்வப்போது ஏற்படும் வெள்ளநீர் வடிந்தோட வழியின்றி தடைப்பட்டதுடன் வீதியை கொங்கிரீட் இட்டு உயர்த்துவதால் போது மக்களின் குடிமனைகள் தாழ்ந்து போவதுமே குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுவதற்கு காணமாக அமைந்தது. அத்துடன் திட்டமிடப்படாமல் அமைக்கப்பட்ட இந்த கொங்கிரீட் வீதிகளால் வீடுகளில் தேங்கியுள்ள வெள்ளநீரை அகற்றுவது என்பது மிக சிரமான காரியமும் கூட. கொங்கிரீட் வீதியோடு சேர்த்து சீரான வடிகான் அமைப்பு உருவாக்கப்படாததால் மக்களின் குடியிருப்புகுள்ளும் அதனை அண்டிய பகுதிகளிலும் வெள்ளம் சூழ்வதுடன் கிழக்கு மாகாணமே வெள்ளக்காடாகி காட்ச்சியளிக்க காரணமாகிவிட்டது.

அதுமாத்திரமன்றி, கிழக்கு மாகாண உள்ளூராட்சிப் பகுதிகளுக்குள் அமைக்கப்பட்டுள்ள வடிகான்கள் வருடத்துக்கொருமுறையாவது பரிசோதிக்கப்பட்டு தூர்வாரப்படாமல் வடிகான்களுக்குள் சேர்ந்து குவிகின்ற குப்பைகளால் மாரி காலங்களில் நீரோட்டம் தடைப்படுவைத்தால் வடிகான்களுக்கு மேலாக வெள்ளநீர் மேலெழுந்து பரவியோடுவதாலும் கிழக்கு மாகாணம் வெள்ளக்காடாக காட்ச்சியளிக்க மற்றொரு காரணமாக அமைத்துவிடுகின்றது.

**கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் அமைக்கப்பட்ட கொங்ரீட் வீதிகளே அவ்வப்போது ஏற்படும் வெள்ளநீர் வழந்தோட வழியின்றி தடைப்பட்டதுடன் வீதியை கொங்கிரீட் இட்டு உயர்த்துவதால் போது மக்களின் குடிமனைகள் தாழ்ந்து போகவும் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுவதற்கு காணமாக அமைந்தது..!**

அதுமட்டுமல்லாமல் அதிகூடிய வெள்ள அபாயம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதான நீர்ப்பாசனக் குளங்களான உன்னிச்சை, உறுகாமம், வாகனேரி போன்ற குளங்கள் திறந்து விடப்படுவதால் வாழைச்சேனை, மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள சித்தாண்டி, வந்தாறுமூலை, மாவடிவேம்பு, சந்திவெளி உள்ளிட்ட தமிழ்க் கிராமங்கள் முழுமையாக நீரில் மூழ்கி விடுகின்றன. அத்துடன் மாதுறுஓயா நீரும் இவ்வேளையில் வந்து விடுவதால் இம்மாவட்டமே நீரில் மூழ்கி விடுகின்றது.

எனவே, எதிர்வரும் நாட்களில் கிழக்கிலங்கை சந்திக்கவுள்ள பாரிய இயற்கை அனர்த்தமொன்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக இயற்கை அனர்த்த மத்திய நிலையம் மற்றும் வானிலை அவதான நிலையம் என்பன நாள்தோறும் வெளியிடும் அறிக்கைகளை பின்பற்றுவதன் மூலம் பொது மக்களாகிய உங்களுக்கு ஏற்படவிருக்கும் பாரிய அனர்த்தங்களை முழுமையாக இல்லாதுவிடினும் பகுதியளவிலேனும் தவிர்க்கலாம் என்பது உண்மையே..!

# பறங்கியாறு பெருக்கெடுப்பு அபாயத்தை எதிர்நோக்கும் சிராட்டிகுளம் கிராமம்

## பேராறு வான் கதவுகள் திறப்பு - அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

எஸ்.பாஸ்கரன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் கன மழை காரணமாக பறங்கி ஆறு பெருக்கெடுத்துள்ளது.

இதனால் முல்லைத்தீவு – மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சிறாட்டிகுளம் கிராமத்திற்குச் செல்லும் வீதியை மூடி பறங்கி ஆற்று நீர் பாய்வதனால் சிராட்டிகுளம் கிராமம் தனிமைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதுடன், பறங்கியாற்றின் நீர்வரத்து அதிகரிக்குமிடத்து சிராட்டிகுளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும். இந்நிலையில் சனிக்கிழமை (23) குறித்த பகுதிக்கு களவிஜயமொன்றை மேற்கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனிமைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள சிறாட்டிகுளம் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தார். இவ்வாறு பறங்கியாறு பெருக்கெடுத்துப் பாய்வதனால் சிறாட்டிகுளத்திலிருந்து நட்டாங்கண்டல் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதேவேளை குருதி மாற்றுச் சிகிச்சை பெற்றுவரும் சிறுநீரக நோயாளர்களும், ஏனைய மருத்துவ சேவைகளைப் பெறச் செல்பவர்களும் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு சிறாட்டிகுளம் கிராம மக்களின் அன்றாட செயற்பாடுகளும் ,தனால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிறாட்டிகுளம் கிராமமும் தனிமைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலைமைகள் தொடர்பில் எம்.பி, துரைராசா ரவிகரன் சிறாட்டிகுளம் மக்களிடம் கேட்டறிந்ததுடன், இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும், மந்தை கிழக்கு பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தியிருந்தார். மேலும் சிராட்டிகுளம் வீதியை சீரமைப்புச் செய்துதருமாறு இதன்போது சிராட்டிகுளம் கிராம மக்களால் ரவிகரன் எம்.பியிடம் கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப்பட்டது.





இதேவேளை, பேராறு அணையின் கீழ் பகுதியில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

பேராற்றுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அதன் இரு வான் கதவுகளும் 1 அடி உயரத்திற்கு திறக்கப்பட்டுள்ளன. இதனால் நீர் செல்லும் பகுதியிலும், பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



# விசேட தேவையுடையோர்களின் சந்தைப்படுதல் கண்காட்சி





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் கறிற்ராஸ் மற்றும் வாழ்வோதயம் ஆகிய அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்ட “நாமும் சாதனையாளர்கள்“ என்ற தொனிப்பொருளில் விசேட தேவையுடையோர்களின் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றது. இந்நிகழ்வு வெள்ளிக் கிழமை (22) மன்னார் நகர சபை மண்டப பகுதியில் வாழ்வோதய இயக்குனர் அருட்பணி அருள்ராஜ் குரூஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

இதில் பிரதம மற்றும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் மற்றும் மன்னார் மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கிறிஸ்துராஜா ஆகியோர் கலந்து கொண்டு விசேட தேவையுடையோர்களின் உற்பத்திக் கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தலையும் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் விசேட தேவையுள்ள சிறுமிகளின் நடனங்கள்,வன்னி கறிற்ராஸ் கியூடெக் விசேட தேவை கல்வி ஆசிரியர்களின் நடனம் ஆகியவை விசேட நிகழ்வுகளாக இடம்பெற்றதுடன் மன்னார் வாழ்வோதயத்தில் நீண்டகால பணியாளராக கடமை புரிந்த திருவாளர் யோகம் அவர்களையும் கௌரவித்த நிகழ்வும் இடம்பெற்றது.

இங்கு இடம்பெற்ற சந்தைப்படுத்தலில் சிறுகைத்தொழில் செய்யும் பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் கண்காட்சி பொருட்களாக வைக்கப்பட்டதுடன் விற்பனையும் செய்யப்பட்டது.

# வாக்குறுதிகளை வழங்கிவிட்டு ஏமாற்றும் அரசாங்கம் இதுவல்ல

## வன்னி மாவட்ட எம்.பி ஜெகதீஸ்வரன்

(கி.வசந்தன்)

வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய அரசாங்கங்கள் போல் அல்லாமல் செயல் வடிவில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

76 வருடங்களுக்குப் பின்னர் ஊழலற்ற நேர்மையான ஒரு அரசாங்கத்தை அமைத்திருக்கிறீர்கள். எமது வெற்றியை உறுதிப்படுத்திய அனைத்து மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது மக்களுக்கான சேவை இன்றிலிருந்து ஆரம்பமாகின்றது. அனைத்து மக்களையும் உள்வாங்கி சம வாய்ப்புக்களையும் உரிமையையும் பெற்றுக்கொள்வதில் நாங்கள் முன்னிலையில் இருப்போம். அதேபோல வளமான தேசத்தையும் அழகான வாழ்க்கையும் அமைப்பதற்கு நாட்டு மக்கள் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும். எதிர்காலத்தில் எம்மால் செய்யப்படும் அனைத்து வேலைத்திட்டங்களும் மக்கள் மயமானதாகவே இருக்கும்.



எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முன்னின்று உழைப்போம். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மற்றும் தமிழ் மக்களிடம் இருக்கும் பிரச்சனைகள் தொடர்பாக ஜனாதிபதி ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார்.

படிப்படியாக அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும். வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய அரசாங்கங்கள் போல் அல்லாது செயல் வடிவிலே எமது ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என்பதில் பூரண நம்பிக்கை இருக்கிறது. நாங்களும் அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்றார்.

# மாவீரர்களை சுதந்திரமாக நினைவுகூர ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பது அவசியம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் கோரிக்கை



நல்லிணக்கத்தின் முதல்படியாக மாவீரர் நினைவேந்தலை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு ஏதுவாக மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவம் வெளியேறி உறவுகள் நினைவுகூர ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தெரிவித்துள்ளார். பருத்தித்துறையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டை ஐக்கிய ப்படுத்தப் போவதாக தெரிவித்து பதவிக்கு வந்த ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க நல்லிணக்கத்தின் முதலாவது நிகழ்வாக மாவீரர் நினைவேந்தலை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதியளிக்கவேண்டும் என்றும் , மாவீரர் துயிலில் இல்ல காணிகளிலிருந்தும் இராணுவம் வெளியேற நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் (23) நடாத்தப்பட்டது.

பருத்தித்துறை மந்திகையில் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேச சபை முன்றலிலிருந்து ஆரம்பமான சைக்கிள் ஓட்டப்போட்டி வடமராட்சி கிழக்கு குடாரப்பில் நிறைவடைந்தது.

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட சன சமூக நிலையங்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட இப் போட்டியில் எட்டு சன சமூக நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. இதில் முதலாமிடத்தினை கற்கோவளம் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த. சிவகரனும், இரண்டாம் இடத்தினை நாகர்கோவில் தெற்கு தரவை சன சமூக நிலையத்தைச் சேர்ந்த சிவகரனும், மூன்றாம் இடத்தினை தொண்டமனாறு கலையரசி சன சமூக நிலையத்தைச் சேர்ந்த டினோஜனும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபை செயலர் தலைமையில் இடம் பெற்ற சைக்கிளோட்ட போட்டியில் பருத்தித்துறை பொலிஸார் பாதுகாப்பினையும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாகிகள் நோயாளர் காவு வண்டி வசதியையும் வழங்கியிருந்தனர்.

# கிளிநொச்சியில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு





சுண்டிக்குளம் இளைஞர்களின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவேந்தலும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் கிளிநொச்சியில் நேற்று முன்தினம்(23) இடம்பெற்றது.

கடந்த 7 ஆண்டுகளாக சுண்டிக்குளம் இளைஞர்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.2024 ஆம் ஆண்டு மாவீரர் வாரம் இடம்பெற்று வரும் நிலையில் நிகழ்வு எழுச்சி பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோரால் பொது உருவப்படம் ஏந்திவரப்பட்டது.வீதி வளைவும் அமைக்கப்பட்டு பெற்றோர் அஞ்சலி மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டதுடன், மலர் தூ வி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது மக்கள் உணர்வு பூர்வமாக அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி அநுரவின் உறுதிமொழிகளை முற்றாக நம்புகின்றோம்



(ஜெளபர் ஏ. கரீம்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் கூட பல கொடூர இன்னல்களை முஸ்லிம் சமூகத்திற்குள் திணிக்கப்பட்டிருந்தாலும் அமைச்சரவையில் ஓரிரு குரல்கள் எமது சமூகம் சார்ந்திருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விடயத்தில் சற்று புறந்தள்ளப்பட்டுள்ளதென்பதில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒரு அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக புதிதாக தெரிவு செய்யப்பட்ட அஷ்ரப் தாஹிர், இறக்காமம் மற்றும் வரிப்பத்தான்சேனையை பிரதேசத்தை சேர்ந்த வாக்களித்த கட்சி தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மக்கள் சந்திப்பின்போது இடம்பெற்ற நிகழ்வில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இறக்காமம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ ின் இறக்காமம் பிரதேச இணைப்பாளர் ஏ. எல். மீராஷாஹிப் தலைமையில் இறக்காமம் கட்சிக் காரியாலய நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர்,

எமது ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரையின் போது இந்நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் கட்சிகளை தவிர்த்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நாட்டுக்காக உழைக்க முன்வர வேண்டும் என்ற விடயத்தை முன்வைத்தார். ஆனால் நாடு என்ற வகையில் அவர்களோடு இணைந்து நாட்டை கட்டியெழுப்புகின்ற விடயத்தில் செயலாற்றுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருந்தாலும் எமது சமூகம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை அமைச்சரவையில் முன் வைப்பதற்கு முஸ்லிம் குரல் ஒன்று என்ற விடயத்தை மக்கள் பாரதூரமாக பார்த்தாலும் எங்களுக்கான ஒரு பங்கீடு இல்லை என்பதாகத்தான் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் சுதந்திரத்திற்கு முன்புள்ள காலங்களிலும் இந்நாட்டின் செயற்பாடுகளிலும் எமது முஸ்லிம் பிரதிநிதிகள் இணைந்து செயல்பட்டு இருக்கிறார்கள். அப்போது கூட அவர்களுக்கான வளங்கல் மற்றும் பங்கீடுகள் எல்லாம் உரிய முறையில் பிரித்து வழங்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் உரைகளில் அதிகமாக பேசப்படுகின்ற விடயம் தான், இனரீதியான எந்த ஒரு செயற்பாட்டையும் எமது அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட மாட்டோம் என்ற உறுதிமொழியை முற்று முழுதாக நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

இதன் போது கட்சி முக்கியஸ்தர்களால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வாழ்த்துப்பா மற்றும் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மத்திய குழுச் செயலாளர் எஸ். எல். முஹைதீன் பாவா இறக்காமல் பிரதேச சபை, முன்னாள் தவிசாளர், உதவி தவிசாளரான மௌலவி ஏ. எல். நௌபர், இளைஞர் காங்கிரஸின் அமைப்பாளர் எம். ஏ. எம். நிப்ரி, திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் ஜின்னா உள்ளிட்ட கட்சிப் பிரமுகங்களும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்திலும் கடும் மழை: தாழ்ந்த நிலங்களில் வெள்ளம்





(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு (23) முதல் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் அதிகரித்த மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் தாழ் நிலப்பகுதிகளும் வெள்ளநீரினால் நிரம்பியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக தங்கியுள்ளனர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் நேற்று முன்தினம் (23) மாலை முதல் வெள்ள அனர்த்தம் தொடர்பாக கண்காணித்து வருவதாகவும் இது தொடர்பாக கிராம நிலாதாரிகளின் அறிக்கை கேரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் நேற்று (24) காலை அக்கரைப்பற்று சின்னமுகத்துவார கழிமுகப் பகுதி வெட்டப்பட்டு வெள்ளநீர் வழிந்தோட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

## மட்டக்களப்பில்

# சுயதொழில் அபிவிருத்தி நிலையம் திறந்து வைப்பு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஹெல்விற்றாஸ் சர்வதேச தன்னார்வ அபிவிருத்தி நிறுவனத்தினால் மட்டக்களப்பில் இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சுயதொழில் அபிவிருத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜலேகா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஹெல்விற்றாஸ் சர்வதேச தன்னார்வ அபிவிருத்தி நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கமலேஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஹெல்விற்றாஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் காவியா சுயதொழில் அபிவிருத்தி சங்கமும் மட்டக்களப்பு கூட்டுறவு இளைஞர் அபிவிருத்தி சங்கமும் இணைந்து இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளன.

மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தி சிறந்த சந்தை வாய்ப்பை வழங்குவதற்காக இந்நிலையம் செயற்படவுள்ளதாகவும் மாவட்டத்தில் 52 சுயதொழில் உற்பத்தி குழுக்களை அமைத்து தொழில் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் அங்கு



தெரிவிக்கப்பட்டது.

மேலும், சுய தொழில் உற்பத்தி பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும் விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்பு குறைவாக காணப்படுகின்றது. இதனை தீர்த்து வைப்பதற்கான நிலையமாக இந்நிலையம் செயற்படவுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச உதவிச் செயலாளர் சுபா சதாகரன், மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவி பணிப்பாளர் நிஷாந்தினி அருள்மொழி, ஹெல்விற்றாஸ் நிறுவன திட்ட முகாமையாளர் ரஞ்சித் விஜகோன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று ஆயிஷாவில் பாராட்டு விழா





(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று வலய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் கடந்த 2022ஃ2023 ஆண்டு சித்தியடைந்த மாணவர்களை பாராட்டிக்கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி என். ஹாறூக் தலைமையில் பெற்ற இந் நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் ஏ.எம்.றஹமத்துல்லாஹ் பிரதம அதிதியாகவும் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் யூ. எல்.எம்.ஹாசிம், முன்னாள் அதிபர் எம்.ஏ.சீ அப்துல் ஹைஹ ஆகியோர் கௌரவ அதிதியாகவும், கலந்து கொண்டனர்.

பாடசாலையின் அபிவிருத்தி சங்கம்,பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இப்பாராட்டு விழாவில் அதிதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அதிதிகளினால் மாணவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# அடுத்த வருடத்தின் முற்பகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த வருடத்தின் முற்பகுதியில் நடத்தப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேர்தலுக்கு முன்மொழியப்பட்ட வேட்பாளர்களில் சிலர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளனர்.

புதிய வேட்புமனுக்களை கோருவதா இல்லையா என்பது தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.தேர்தல் திகதி தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.

## மு.காவின் சுழற்சி முறை

# தேசியப்பட்டியல் முதலில் ஏறாவூர் எம்.எஸ். நழிமுக்கு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பட்டியல் எம்பியாக ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் இது தொடர்பான கடிதத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்ததன் அடிப்படையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நழிம் தேசியப் பட்டியல் எம்பியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த தேசியப் பட்டியல் எம்.பி நியமனம் வருடத்திற்கு ஒருவருக்கு என்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசால் பகிர்ந்தளிக்கப்படும் வாய்ப்பில் முதலாவதாக நழிம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காலமான ஐந்து வருடத்தில் தலா ஒருவருக்கு ஒருவருடம் என்ற அடிப்படையில் இந்த தேசியப்பட்டியல் எம்பி நியமனம் ஐவருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் இலங்கை சாரணர் சங்கத்தின் கலந்துரையாடல்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இலங்கை சாரணர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவரும், மாவட்டச் செயலாளருமான ஜஸ்டினா ஜலேகா தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில், மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் சாரணர்கள் செயற்பாட்டை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், மாவட்ட சாரணர் நிருவாக கட்டமைப்பு தொடர்பாகவும் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத்தின் செயற்குழுவின் தவிசாளரும், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருமான வை. ஜயச்சந்திரன், செயற்குழுவின் செயலாளரும், கிழக்கு மாகாணக் கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளருமான எஸ். நவநீதன் செயற்குழுவின் பொருளாளரும், கணக்காய்வு அத்தியட்சகருமான றொபேர்ட, மாவட்ட சாரணர் சங்கத்தின் பதில் மாவட்ட சாரணர் ஆணையாளரும், இலங்கை சாரணர் சங்கத்தின் உதவிப் பிரதம ஆணையாளருமான அமிர்தன் கார்மேகம், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலய ஆணையாளரும், கிழக்கு மாகாண இணைப்பாளருமான பி. சசிகுமார் உட்பட மாவட்ட உதவி ஆணையாளர்களும், மாவட்ட சாரணத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் ஒளி விழா











(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் வருடாந்த ஒளி விழா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ. ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் 125ஆவது ஆண்டை சிறப்பிக்கும் வகையில் இந்த ஒளி விழா ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. இதில் மாணவர்களின் கலை,கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன் போட்டி நிகழ்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்தந்தை ஏ.அகஸ்டின் நவரெத்தினம் அடிகளார் கலந்து கொண்டார். மேலும், மதப் பெரியார்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நிருவாகத்தினர், முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். 125வது ஆண்டை முன்னிட்டு இந்த வருடம் பூராகவும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. 125வது ஆண்டை வெற்றி ஆண்டாக கொண்டாடுவதற்கு என்று உருவாக்கப்பட்ட பழைய மாணவர் செயற்குழு மிகவும் சிறப்பாக இதற்கான ஒழுங்குபடுத்தல்களை செய்து வருகிறார்கள்.அண்மையில் வாணி விழா, மீலாதுன் நபி விழா போன்ற கலாசார பண்பாட்டு நிகழ்வுகளும் சிறப்பாக நடை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வல்லுநர்களை உருவாக்கி தொழிலாளர் சந்தையை உருவாக்குவதே திட்டம்



திறமையான தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பான திட்டங்களை ஏற்கனவே தொடக்கியுள்ளோம். தொழில் வல்லுநர்களை உருவாக்கி பெரிய தொழிலாளர் சந்தையை உருவாக்குவதே எங்கள் நோக்கமெனத் தெரிவித்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் ஆனந்த லால் ஹெட்டியாராச்சி, இது தொடர்பாக ஏனைய அரச நிறுவனங்களுடன் ஏற்கனவே கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளோமெனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வழிநடத்தும் ஒரேயொரு அரச நிறுவனம் என்ற ரீதியில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்கு இரண்டு பிரதான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. முதலாவது இலங்கையர்களை வெளிநாட்டில் பணிபுரியச் செய்வது என்றும் இரண்டாவது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு விமானப் பயணச்சீட்டுகளை கொள்வனவு செய்தல் என்றும் அவர் கூறியுள்ளார். விமான பயணச்சீட்டுகளை பெறுவது தொடர்பான பணிகளை நாங்கள் ஆரம்பித்த உடனேயே, முகவர் நிலையம் பெறும் விமான பயணச்சீட்டுகளின் விலை சந்தை விலையை விட அதிகமாக இருப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அதற்கும் இ-டெண்டர் முறையை அறிமுகப்படுத்தினோம். அதன் மூலம், பாரம்பரிய முறைக்கு பதிலாக, மின்னஞ்சல் மூலம் டெண்டர் சமர்ப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, போட்டியும் அதிகரித்தது. இஸ்ரேலுக்கு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களின் விமான பயணச்சீட்டை ஒரு இலட்ச ரூபா முதல் எழுபத்தைந்தாயிரம் ரூபாயாகக் குறைக்கும் திறனை ஏற்கனவே பெற்றுள்ளோம்.

அதுமட்டுமின்றி டிசம்பர் மாதம் முதல் தென்கொரியாவுக்கு வேலைக்கு செல்லும் தொழிலாளர்களின் விமான பயணச்சீட்டை தற்போதைய விலையை விட குறைந்த விலையில் பெற முடியும். கடந்த அக்டோபர் 10 முதல் நவம்பர் மாதம் 2 ஆவது வாரம் வரை 295,000 இற்கும் மேல் பெற்றுக்கொள்ளப்பட்ட விமான பயணச்சீட்டுகளை போட்டி சந்தை மூலம் 170,000 ரூபா முதல் 160,000 ரூபா வரை பெற முடியும். வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு இந்த முழு நன்மையை வழங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விமானப் பயணச்சீட்டு விலையை குறைப்பதற்கு நடவடிக்கை

தொழில் நிமித்தம் இஸ்ரேலுக்கு செல்லும் இலங்கையர்களுக் கான விமானப் பயணச்சீட்டு விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க, பயணச்சீட்டுக் கட்டணம் அதிகமாக இருப்பதாக எழுந்த முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இதன் ஆலோசனைக்கமைய இந்த இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகத்தின் தலைவர் ஆனந்த லால் ஹெட்டியாராச்சி ஆகியோர் இது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்திருப்பதாவது,

"இஸ்ரேல் மற்றும் கொரியாவில் தொழிலுக்காக விண்ணப்பிக்கும் நபர்களின் விமான பயணச்சீட்டுகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் பெற்று தொழில் தேடுபவர்களுக்கு வழங்கும் முறை நீண்ட காலமாக இருந்தது.

பயணச்சீட்டுக் கட்டணம் அதிகமாக இருப்பதாக எனக்கு தனிப்பட்ட முறையில் பல முறைப்பாடுகள் கிடைத்தன.முன்னதாக ஏல முறையினூடாக முறையில் விமான பயணச்சீட்டு பெறும் முறை இடம்பெற்றது.

ஆனால், சில குறைபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. இது தொடர்பாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகத்தின் தலைவருடன் கலந்துரையாடியதன் பின்னர் நவீன முறைகளை பின்பற்றி இலங்கை விமான சேவை நிறுவனத்திடம் இருந்து நேரடியாக விமான பயணச் சீட்டுகளை கொள்வனவு செய்து விலையை குறைக்க முடிந்தது. இந்த குறைக்கப்பட்ட தொகை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நேரடியாகக் கிடைக்கும். ஒரு மாதத்தில் சுமார் 500 விமான பயணச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நீண்ட காலமாக , ஒரு பயணச்சீட்டுக்கு 75,000 ரூபா முதல்-90,000 ரூபா வரை அறவிடப்படுகிறது.

அதன்படி, ஒரு மாதத்தில் 500 விமான பயணச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டால் அது மிகப்பெரிய தொகை. புதிய தலைமைத்துவத்தின் கீழ் நாடு புதிய திசையில் பயணித்துக்கொண்டிருக்கும் வேளையில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை அதிகரிக்கச் செயற்படுகின்றோம்.

நவம்பர் மாதம் வரை பழைய முறையிலேயே விமான பயணச்சீட்டு முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, புதிய கொள்வனவு முறையை டிசம்பர் மாதம் முதல் அமுல்படுத்த உள்ளோம்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தை சிறந்த ஜனரஞ்சக சேவைகளை வழங்கும் நிறுவனங்களாக நியமிப்பதே எமது நோக்கமாகும். இந்த நிறுவனங்கள் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும். அந்த சேவைகளை முடிந்தவரை திறம்பட வழங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். " என்றார்.

# புத்தளம் பிரதிநிதித்துவம் இல்லாமல் போக காரணம் சிறிய கட்சிகளே



புத்தளம் மக்களுக்கான நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை இல்லாமல் செய்தவர்கள் 5 சதவீத வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாத சிறிய கட்சிகளே காரணமெனத் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன், நாம் இவர்களுக்கு வாக்களிக்க வேண்டாமென கேட்டு வந்த போதும்,அவர்களுக்கு மக்கள் வாக்களித்தமையே இப்பிரதிநிதித்துவம் பறிபோனமைக்கு காரணம் என்றும் தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிட்ட வேட்பாளர்களான என்.ரீ.தாஹீர் மற்றும் சட்டத்தரணி முஹம்மட் ஆகியோரின் இல்லத்தில் வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் இங்கு அவர் பேசுகையில்,

கூட்டணி தொடர்பில் பேசப்பட்ட போதும்.இந்த கூட்டணியின் வேட்பாளர்கள் தொடர்பில் மக்களின் நம்பிக்கை ஏற்படவில்லை. இதற்கான காரணமாக கடந்த கால அவர்களின் செயற்பாடாகும். இதனால் தான் இம்முறை தேசிய கட்சியொன்றில் போட்டியிடுவதன் மூலம் நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் பற்றி நீண்ட கலந்துரையாடலின் பின்னர் முடிவு எட்டப்பட்டது. புத்தளம் மாவட்டத்தில் 3 தசாப்தங்களாக நாடாளுமன்ற அதிகாரம் இல்லாமல் இருந்த போது முதன் முதலாக புத்தளத்தின் சிரேஷ்ட அரசியல்வாதியான எம்.எச்.எம்.நவவிக்கு தேசியப் பட்டியல் வழங்கி,அதன் பிற்பாடு அடுத்த தேர்தலில் கூட்டமைப்பு அமைத்து பல அரசியல் கட்சிகளை ஒன்றுசேர்த்து நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதிலும்,இந்த தேர்தலில் வியூகம் அமைத்து ஒன்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக்கொள்வதாக இருந்தால் 1 இலட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் புத்தளம் மாவட்டத்தில் உள்ளதால் அதில் 30 ஆயிரம் வாக்குகளை ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அளிப்பதன் அவசியம் தொடர்பில் நாம் பேசிவந்தோம். ஆனால் மக்கள் இது தொடர்பில் கரிசனை செலுத்தாது வாக்களித்தன் பலன் நாம் எதிர்பார்த்த எமது நாடாளுமன்ற பிரதி நிதியினை இழந்துள்ளோம்.

தேர்தல் முடிந்ததும் நான் இன்று உங்களது மாவட்டத்திற்கு வருகைத்தந்துள்ளேன்.ஏனெனில் நாம் இந்த மக்களை நேசிப்பவன் என்பதினால்,நாங்கள் இன்று உங்களுடன் கலந்துள்ளோம்.இது என்றும் நாமும்,எமது கட்சியும் உங்கள் மீது கொண்டுள்ள அன்பாகும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மிகவும் குறைந்த வாக்குகளின் வித்தியாசத்தில் தாஹிர் தோல்வியை தழுவியமை பெறும் கவலைத்தருகின்றது. அவர் வெற்றி பெறுவார் என்ற திட்டத்தை வகுக்க வேண்டும் என்று மேடை மேடையாக நாம் சொன்னோம்.சிலர் அதனை புரிந்து கொள்ளாமல் செயற்பட்டமையினை பார்க்கமுடிந்தது.இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

# கொட்டகலை நகரில் சுகாதார நடைமுறைகளை மீறுவோர் மீது நடவடிக்கை

(க.கிஷாந்தன்)



கொட்டகலை நகரில் சுகாதார நடைமுறைகளை மீறும் வகையிலான வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட உணவகம், சில்லறைக் கடைகள் மற்றும் மொத்த வியாபாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

18 கடை உரிமையாளர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பரிசோதர்களாலேயே இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொட்டகலை நகருக்கு வருவோருக்கு சுகாதார பாதுகாப்புடனான உணவுகள் மற்றும் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தால் திடீர் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கொட்டகலை பிரதேச சபையிடம் வர்த்தக அனுமதி பத்திரம் பெறாமல், சுகாதாரம் அற்ற முறையில் உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை நடத்திவந்த 18 உரிமையாளர்கள் கண்டறியப்பட்டனர். அத்துடன், சுகாதார பாதுகாப்பற்ற பல உணவுப் பொருட்களும் இதன்போது அழிக்கப்பட்டன.

# புதிய மாணவர்கள் அனுமதி

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் காஸிமிய்யா மத்ரஸாவுக்கு 2025 புதிய கல்வி ஆண்டு ஷரீஆ பிரிவுக்கான நேர்முகப் பரீட்சை 2025-01-18ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு காஸிமிய்யா வளாகத்தில் நடைபெறவிருக்கிறது.

தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2025ம் ஆண்டு பாடசாலை கல்வியில் 8ம் அல்லது 9ம் தரத்தில் கற்கக் கூடியோராகவும், அல் குர்ஆனைப் பார்த்து திருத்தமாக ஓதக் கூடியோராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் மௌலவி அல்ஆலிம், க.பொ.த. சாதாரண தர, உயர் தர கல்விகளையும், கனணி அறிவையும் மத்ரஸாவிலேயே கற்று அரசாங்க பரீட்சைகளுக்கு தோற்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ள தகுதியான திறமைச் சான்றிதழ்களைப் பெறுவர். விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 12-01-2025ம் திகதிக்கு முன்னர் தமது பெயர், முகவரி, பிறந்த திகதி, பாடசாலையில் இறுதியாக சித்தி அடைந்த தரம், தேக ஆரோக்கியம் ஆகிய விபரங்களுடன் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தை கீழ் காணும் முகவரி, வாட்சாப் அல்லது நேரில் சமர்பிக்கவும். நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்: பிறப்பு அத்தாட்சிப்பத்திர மூலப்பிரதி, பாடசாலையில் இறுதியாக சித்தி அடைந்த வகுப்பின் தேர்ச்சி அறிக்கை,பாடசாலையினதும் மஹல்லா மஸ்ஜிதினதும் பெறப்பட்ட ஒழுக்க சான்றிதழ், வேறு திறமைச் சான்றிதழ்கள் என்பன. மேலதிக விபரங்களுக்கு அதிபர் அஷ்ஷெய்க் எச்.எம்.மின்ஹாஜ் (இஸ்லாஹி) தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# எழுவர் மீது குளவிக்கொட்டு

(க.கிஷாந்தன்)

தேயிலை மலையில் கொழுந்து கொய்துகொண்டிருந்த பெண் தோட்டத் தொழிலாளர்கள் எழுவர் நேற்று மாலை குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவரும் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெரேசியா தோட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ ார் தெரிவித்தனர். குளவிக்கொட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எழுவரில் இருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைப்பெற்று வீடு திரும்பியுள்ளனர் எனவும், ஏனைய ஐவரும் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சைப்பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கலைமகள் மகா வித்தியாலயத்தில் 10 ஆண்டுகளின் பின் பரிசளிப்பு விழா













(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா நிகழ்வு கடந்த பத்து ஆண்டுகளின் பின்னர் நடைபெற்றது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வி. கனகசிங்கம் இவ்விழாவில் பிரதம அதிதியாககலந்துகொண்டார். பாடசாலை பேண்ட் வாத்திய இசையுடன் அதிதிகள் வரவேற்கப்பட்டனர். பாடசாலை அதிபர் எஸ்டி. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். ரவிராஜா, ஏறாவூர்ப் பற்று -1 பிரதேச கல்வியதிகாரி ரீ.ராஜமோகன், கெடேட் கட்டளையதிகாரி லெப்டினன் கேர்ணல் பீ.அருண சாந்த, பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் பீ. மதியழகன், ஓய்வுநிலை கல்வியதிகாரி எம். தயானந்தன் உள்ளிட்ட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். கல்விச் செயற்பாடுகள் மற்றும் புறக்கிருத்திய நடவடிக்கைகளில் திறமைகாட்டிய மாணவர்கள் இவ்விழாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இப்பாடசாலையிலிருந்து இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்கள், கெடேட் மாணவர்கள், அரசாங்க பொதுப்பரீட்சைகளில் திறமையான அடைவுகளைப்பெற்ற மாணவர்கள் மற்றும் விளையாட்டு முதலான துறைகளில் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் சாதனையீட்டிய மாணவர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர். ஆறுமுகத்தான் குடியிருப்பு கலை மகள் மகா வித்தியாலயம் 142 வருட வரலாற்றைக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மகாராஷ்டிரா தேர்தல் முடிவுகள் பாஜக கூட்டணி அபார வெற்றி



இந்தியாவின் மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் தேர்தலில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி (பாஜக) வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில், மகாராஷ்டிராவில் கிடைத்ததைப் போன்ற ஒரு தோல்வியை காங்கிரஸால் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காங்கிரஸ் அங்கம் வகிக்கும் மகா விகாஸ் அகாடி கூட்டணி மகாராஷ்டிராவில் 46 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. இது அந்த மாநிலத்தின் மூன்றில் ஒரு பகுதி தொகுதியை விட குறைவு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றுள்ளது. பாஜக இத்தேர்தலில் 132 தொகுதிகளை கைப்பற்றியுள்ளது.

மக்களவைத் தேர்தலின் போது மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 48 மக்களவை தொகுதிகளில், மகா விகாஸ் அகாடி கூட்டணி 30 தொகுதிகளை கைப்பற்றியது.

பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணிக்கு 18 இடங்களே கிடைத்தன. அத்தேர்தலில் தான் போட்டியிட்ட 23 தொகுதிகளில் 9 தொகுதிகளை மட்டுமே பாரதிய ஜனதா கட்சி வென்றிருந்தது.

இந்நிலையில், நாடாளுமன்ற தேர்தலில் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற இந்தியா கூட்டணி, அடுத்து வந்த ஐந்தே மாதங்களில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தோல்வி பாஜகவுடன் நேருக்கு நேர் மோதுவதில் காங்கிரஸின் பலவீனம் மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகாராஷ்டிராவில் நவம்பர் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெற்றிருந்தது. இதில் 4000க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். தற்போது வெளியாகியுள்ள முடிவுகளின்படி, பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணி 220 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

மகாயுதி கூட்டணியில் பாஜக மட்டும் 132 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், மகாராஷ்டிரா முதலமைச்சரவை தெரிவு செய்வதில் பாஜக கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

# ஷாஹி ஜமா மசூதியை ஆய்வு செய்வதற்கு கடும் எதிர்ப்பு

உத்தரபிரதேச மாநிலம் சம்பல் மாவட்டத்தில் ஷாஹி ஜமா என்ற மசூதியை ஆய்வு செய்ய வந்த பொலிஸார் மீது பொதுமக்கள் கல் வீசி தாக்குதல் நடத்தியது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஷாஹி ஜமா மசூதி உள்ள இடத்தில் முன்பு ஹரி ஹர் மந்திர் என்ற கோவில் இருந்ததாகவும் அதனை 1529 இல் முகலாயப் பேரரசர் பாபர் இடித்ததாகவும், பின்னர் அப்பகுதியில் மசூதி கட்டப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

இது குறித்து அந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சட்டத்தரணி விஷ்ணு சங்கர் ஜெயின் என்பவர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் மசூதியை ஆய்வு செய்ய குழு ஒன்றை அமைத்து உத்தரவிட்டது. அதன்படி நவம்பர் 19ஆம் திகதி பொலிஸார் மற்றும் மசூதி நிர்வாகத்தினர் முன்னிலையில் மசூதியில் ஆய்வு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஷாஹி ஜமா மசூதியை ஆய்வு செய்வதற்காக ஆய்வு குழுவினர் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன்



மீண்டும் சென்றுள்ளனர். இதனையடுத்து மசூதியை ஆய்வு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளூர் மக்கள் கல் வீசி தாக்குதல் நடத்தினர். வன்முறைக்கு மத்தியிலும் ஆய்வு குழுவினர் மசூதியை ஆய்வு செய்து முடித்தனர். 29 ஆம் திகதி ஆய்வு அறிக்கையை நீதிமன்றத்தில் ஆய்வு குழுவினர் சமர்ப்பிக்க உள்ளனர்.

# விஜய்யுடன் மேடையை பகிர திருமாவளவன் மறுப்பு

அரசியல் சூழ்நிலை காரணமாக டிசம்பர் ஆறாம் திகதி நடைபெறவுள்ள அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (விசிக) தலைவர் தொல். திருமாவளவன் பங்கேற்கவில்லை என கூறப்படுகிறது.

புதிதாக தமிழக வெற்றிக் கழகம் (தவெக) எனும் கட்சி தொடங்கிய நடிகர் விஜய் கடந்த மாதம் விக்கிரவாண்டியில் முதல் மாநாட்டை நடத்தினர். எங்களுடன் கூட்டணிக்கு வருபவர்களுக்கு ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்குத்தரப்படும் என அவர் பேசியிருந்தார்.



அவரின் இந்த பேச்சு அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளான நிலையில், வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்துடன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கூட்டணி வைக்கலாம் என பேசப்பட்டது.

எனினும், விஜய்யின் அரசியல் நிலைப்பாட்டை திருமாவளவன் கடுமையாகவே விமர்சித்து வந்தார்.

இதற்கிடையே, சென்னையில் டிசம்பர் ஆறாம் திகதி நடைபெறவுள்ள அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் திருமாவளவனும், விஜய்யும் ஒரே மேடையில் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியானது.

இதனால், விசிக தவெக கூட்டணி உறுதி என்ற வகையில் பேசப்பட்டது. ஆனாலும் விஜய்யை விமர்சிப்பதை திருமாவளவன் நிறுத்தவில்லை. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில்தான் விசிக இருக்கும் என்பதை திருமா மீண்டும் தெளிவுப்படுத்தினார்.

இதற்கிடையில், இந்த சந்திப்பை தவிர்க்குமாறு, திமுக தரப்பில் இருந்து திருமாவளவனுக்கு கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்டுகின்றது.

இந்த நிலையில், அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் திருமாவளவன் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டு திருமாவளவன் இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை என்கின்றனர்.

விஜய்யின் திமுக எதிர்ப்பு, புத்தக வெளியீட்டு விழாவில் விஜய்க்கு அதிக முக்கியத்துவம் தரப்படலாம் என்பது போன்ற விவகாரங்களே திருமா இந்த நிகழ்வைப் புறக்கணிக்க காரணம் என்கின்றனர்.

# இன்ஸ்டாகிராம் காதல் 5வயது மகளை கொன்ற தாய்

இன்ஸ்டாகிராமில் காதலித்தவரை திருமணம் செய்துகொள்வதற்காகப் பெற்ற மகளை தாய் கொலை செய்த சம்பவம் வடமேற்கு டில்லியின் அசோக் விஹாரில் பதிவாகியுள்ளது.

தனது கள்ளக் காதலுக்கு தடையாக இருந்த ஐந்து வயது மகளை தாய் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக கொண்டு வரப்பட்ட சிறுமியின் கழுத்து நெறிக்கப்பட்டதற்கான அடையாளம் சந்தேகத்தை ஏற்படுத்திய நிலையில் பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியிருந்தனர்.

முதற்கட்டமாக குழந்தையின் தாய் உட்பட உறவினர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. தொடர்ச்சியான விசாரணைக்குப் பிறகு, தாய் தனது மகளை கழுத்தை நெரித்துக் கொன்றதை பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டார்.



# இந்திய இராணுவத்திற்கு அதிநவீன ஹெலிகாப்டர்கள்



இந்திய இராணுவத்துக்கான போயிங் AH-64E அப்பாச்சி தாக்குதல் ஹெலிகாப்டர்களின் முதல் தொகுப்பை வழங்குவதில் கணிசமான தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, டிசம்பரில் இந்திய இராணுவம் தாக்குதல் ஹெலிகாப்டர்களைப் பெற்றுக்கொள்ளும் என்று சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. முதலில் மே மற்றும் ஜூலை மாதங்களில் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டிருந்த நிலையில் ஏழு மாதங்கள் தாமதமானது.

உற்பத்தி நிறுத்தம் காரணமாக தாமதம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், போயிங் நிறுவனம் விநியோக அட்டவணையை உறுதி செய்துள்ளது, இதன்படி, டிசம்பரில் மூன்று ஹெலிகாப்டர்களும்? 2025 ஜனவரியில் மூன்று ஹெலிகாப்டர்கள் வழங்கப்படவுள்ளன.

# மகளுக்கு தந்தை செய்த கொடுமை: பாக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு

திருவொற்றியூர் அருகே எட்டாம் வகுப்பு மாணவியை அவரது தந்தை மற்றும் அவரது 19 வயது மருமகன் இரண்டு ஆண்டுகளாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கி வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இந்நிலையில், தனித்தனியாக வசிக்கும் சிறுமியின் தாயார் அளித்த முறைப்பாட்டின் பேரில் அனைத்து மகளிர் பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

இந்த தம்பதியினர் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்துள்ளனர். மூன்று குழந்தைகளும் அருகில் உள்ள பாடாசலைகளில் படித்து வருவதால் அவர்களே கவனித்து வந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன், அந்தப் பெண், மூன்றாம் வகுப்பு படிக்கும் இரண்டாவது மகளை, தன் தந்தையுடன் தங்க அனுமதித்தார். சிறுமியை அருகில் உள்ள பாடசாலையில் சேர்த்தனர்.

இந்நிலையில், ஒரு வாரத்திற்கு முன்பு, சிறுமி தனது தாய் மற்றும் உடன்பிறப்புகளைப் பார்க்க விரும்பியுள்ளார். இததனையடுத்து தாத்தா பாட்டி வீட்டில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கடந்த இரண்டு ஆண்டுகளாக தனது தந்தை மற்றும் உறவினரால் தான் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக சிறுமி தனது தாயிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து, திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சிறுமியின் தாய் முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில, சிறுமியின் தந்தை மற்றும் மருமகன் மீது போக்சோ



சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

# மணிப்பூர் கலவரம்: வீடுகளுக்கு தீவைத்த 41 பேர் கைது

மணிப்பூரில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையின் மதியில் எம்எல்ஏக்களின் வீடுகளுக்கு தீ வைத்த 41 பேர் கைது செய்யப்பட்டதாக வெளிவந்த தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

மணிப்பூரின் இம்பால் பள்ளத்தாக்கில் உள்ள சட்டப்பேரவை உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைத்து சேதம் விளைவித்ததாக ஏற்கனவே 34 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.


இந்நிலையில், நேற்று மேலும் 7 பேர் கைது செய்யப்பட்டதால், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளது. மணிப்பூரில் மைதேயி மற்றும் குகி ஆகிய இரண்டு சமூகங்களுக்கு இடையே கடந்த ஆண்டு முதல் கலவரம் நடைபெற்று ருகின்றது.



இந்த கலவரத்தில் இதுவரை 200 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அண்மையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 11 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த நிலையில், போராட்டத்தின் உச்சகட்டமாக கடந்த 16ஆம் திகதி மணிப்பூர் முதல்வரின் வீட்டை போராட்டக்காரர்கள் தாக்கினார்கள். மேலும் அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்களின் வீடுகளுக்கும் தீ வைத்தனர். இதனால் மணிப்பூரில் பதற்றம் அதிகரித்திருந்தது. இதுவரை தீவைப்பு சம்பந்தமாக 41 பேர் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

# “மனதின் குரலில்” பேசிய மோடி

”சென்னையைச் சேர்ந்த கூடுகள் அறக்கட்டளை அமைப்பைச் சேர்ந்த சிலர், சிட்டுக்குருவிகள் நமது அன்றாட வாழ்விலே எத்தனை மகத்துவம் வாய்ந்தவை என்பதை பள்ளிகளுக்குச் சென்று புரியவைத்துக் கொண்டிருக்கிறார்கள்” என்று மனதின் குரலில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிறு அன்றும் பிரதமர் நரேந்திர மோடி மனதின் குரல் என்ற வானொலி நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களுக்காக உரையாற்றி வருகிறார். நானும் என்.சி.சி–யில் கேடட்டாக இருந்திருக்கிறேன் என்பதால், இதனால் எனக்குக் கிடைத்த அனுபவம் விலைமதிப்பில்லாதது என்பதை என்னால் உறுதியாக கூற முடியும். இது போன்ற முயற்சிகள் மூலம் குழந்தைகளிடம் அவர்களின் அக்கம்பக்கத்தில் இருப்பவற்றைக் கண்டு, புரிந்து கொண்டு பல கண்ணோட்டங்களை ஏற்படுத்த முடியும். மனதின் குரலின் நேயர்களும் கூட இத்தகைய முயற்சிகளைச் செய்து குழந்தைகளின் புரிதலை மேம்படுத்த இயலும்.” இவ்வாறு பிரதமர் பேசினார்.



# இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணை தாக்குதல்

மத்திய இஸ்ரேலை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், இதில் ஐந்து ஏவுகணைகள் இடைமறிக்கப்பட்டதாகவும், ஒன்று தரையில் இறங்கியதாகவும் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏவுகணை தாக்குதலை தொடர்ந்து டெல் அவிவின் வடக்கே உள்ள நெதன்யா மற்றும் ஹெர்ஸ்லியாவிலும் சைரன்களை ஒலித்தது.

இதனிடையே, பல ஆளில்லா விமானங்களும் இஸ்ரேலை குறிவைத்து தாக்கியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆளில்லா விமான தாக்குதல் கலிலி பகுதியை குறிவைத்து நடத்தப்பட்டது. மேலும், இஸ்ரேல் மீது மேலும் பல தாக்குதல்கள் நடப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போர்நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடரும் நிலையில், மத்திய லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

சனிக்கிழமையன்று இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் எட்டு மாடிக் கட்டிடம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. இந்த தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதுடன், 33 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் பெய்ரூட் நகரின் மீது அதிகாலை 4.00 மணியளவில் ஐந்து ஏவுகணைகள் ஏவப்பட்டன. பாஸ்தாவில் உள்ள அல் மாமூன் வீதியிலும் தாக்குதல் நடத்தப்பட்டது.

# ஜோர்தானில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் அருகே துப்பாக்கிச் சூடு

ஜோர்தான் தலைநகர் அம்மானில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் அருகே நடந்த துப்பாக்கிச் சூடு, தமது நாட்டின் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் என்று ஜோர்தான் அரசாங்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (நவம்பர் 24) அறிவித்துள்ளது.

அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ரபீஹ் பகுதியில் நேற்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் பொது பாதுகாப்புப் படையினர் மீதான



பயங்கரவாதத் தாக்குதல் என்று ஊடக விவகாரங்களுக்கான இணை அமைச்சரும் அரசாங்க செய்தித் தொடர்பாளருமான முகமது அல்-மொமானி கூறினார்.

”அனைத்து விவரங்கள் மற்றும் இணைப்புகளைக் கண்டறியவும், அதற்கேற்ப தேவையான பாதுகாப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும்” விசாரணை தொடங்கப்பட்டதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் மற்றும் குற்றவியல் பதிவுகள் உள்ளவர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் என்று அமைச்சர் மொமானி சுட்டிக்காட்டினார், மேலும் இந்த தாக்குதல்கள் ஒவ்வொரு மரியாதைக்குரிய குடிமகனாலும் கண்டிக்கப்படுவதாக கூறினார்.

”ஜோர்தானின் ஸ்திரத்தன்மையும் பாதுகாப்பும் ஒரு சிவப்புக் கோடு, அதை யாரும் சீர்குலைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள், இது நாட்டின் பாதுகாப்பை சேதப்படுத்துவது என்பதைக் குறிக்கிறது. அவ்வாறு செய்வதற்கான முயற்சிகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக, பொது பாதுகாப்பு இயக்குநரகம் அம்மானில் உள்ள ரபீஹ் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு சம்பவத்தை கையாண்டது.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், பின்னர் பாதுகாப்புப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டார். அந்த நபர் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுடத் தொடங்கினார்.

எனினும் பாதுகாப்பு பணியாளர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. படுகாயம் அடைந்த மூன்று பொலிஸார் சிகிச்சை பெற்று வந்தனர்.

இதற்கிடையில், துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதையடுத்து, தூ தரகத்திற்கு அருகிலுள்ள பகுதியை ஜோர்தான் பொலிஸார் சுற்றி வளைத்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ராபியா பகுதி இஸ்ரேலுக்கு எதிராக அடிக்கடி நடக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஒரு முக்கிய இடமாகும். காசாவில் நடந்த போரில் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வு அதிகமாக இருப்பதால், ஜோர்தான் பிராந்தியம் முழுவதும் அமைதியான பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இந்தியா வருகின்றார் பிரித்தானிய மன்னர்



பிரித்தானிய மன்னர் மற்றும் அவரது மனைவி கமீலா இருவரும் அரசு முறை பயணமாக இந்தியா வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது மன்னர் புற்றுநோய்க்கு இந்தியாவில் சிகிச்சை எடுத்துள்கொள்வார் எனவும் கூறப்படுகின்றது.

அரசு முறை பயணமாக மன்னர் இந்தியா வருவது உலக அரங்கில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மன்னர் மூன்றாம் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமீலா அரசு முறை பயணமாக அடுத்த ஆண்டு இந்தியா வர இருப்பதாக லண்டனில் உள்ள முன்னணி நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா மட்டுமின்றி பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கும் மன்னர் பயணம் செய்வார் என கூறப்பட்டுள்ளது.


இந்நிலையில், வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யும் அளவுக்கு மன்னரின் உடல்நிலை சரியாக இருக்கிறதா என்பதை வைத்தியர்கள் பரிசோதனை செய்வார்கள்.

இதனையடுத்து இந்தியாவிற்கான பயணம் குறித்த திகதி அறிவிக்கப்படும் என அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மன்னர் சார்லஸ் புற்றுநோய்க்கு சிகிச்சை மேற்கொள்வதும் இந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டது; உக்ரைன் முன்னாள் இராணுவ தளபதி

ரஷியா-உக்ரைன் போர் நடைபெற்றுவருவதற்கு மத்தியில் மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டதாக உக்ரைன் முன்னாள் இராணுவ தளபதியும் பிரிட்டனுக்கான தற்போதைய உக்ரைன் தூதருமான வலேரி ஜலுஷ்னி தெரிவித்துள்ளார். உக்ரைன்ஸ்கா பிராவ்டாவின் விருது வழங்கும் விழாவில் உக்ரைன் முன்னாள் ராணுவத் தளபதி ஜலுஷ்னி கூறுகையில்;



ரஷியா-உக்ரைன் மோதலில் ரஷியாவின் நட்பு நாடுகள் நேரடியாக போரில் ஈடுபட்டிருப்பது மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டது என்று அர்த்தம் என்று பொலிட்டிகோ செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் ”2024ஆம் ஆண்டு மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டது. 10,000 வட கொரிய ஆயதக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் குர்ஸ்க் பகுதியில் நிலைநிறுத்தியிருப்பதாகவும், உக்ரைனுக்கு எதிராக ஈரானின் டிரோன்கள் மற்றும் பிற அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே உக்ரைனில் அதிநவீன தொழில்நுட்பத்தை தாக்குப்பிடித்து இருக்கிறது. போரில் தனியாக வெல்லுமா என்று உறுதியாக கூறமுடியாது என்றார்




# உலகின் பெரும் பணக்காரராக எலான் மஸ்க்



எலான் மஸ்கின் சொத்து மதிப்பு 334.3 பில்லியன் டொலராக உயர்ந்ததை அடுத்து, உலகிலேயே இதுவரை இல்லாத சொத்து மதிப்பைக் கொண்ட பெரும் பணக்காரர் என்ற புகழை அவர் பெற்றுக்கொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப்புக்கு எலான் மஸ்க் ஆதரவு அளித்ததுடன், தேர்தலில் போட்டியிட நிதியுதவியும் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் வெற்றி பெற்ற பிறகு எலான் மஸ்கின் சொத்து மதிப்பு சடுதியாக உயர்ந்துள்ளது. அமெரிக்க தேர்தல் முடிவு நாளில் மட்டும் எலான் மஸ்கின் சொத்து மதிப்பு பலமடங்கு அதிகரித்தது.

இதற்கு டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட எழுச்சியே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு, ஒட்டுமொத்தமாக 40 சதவீதம் சொத்து மதிப்பு உயர்ந்த நிலையில், எலான் மஸ்கின் மொத்த சொத்து மதிப்பு இந்திய மதிப்பில் 29 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

தன்மூலம், உலகிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு சொத்து மதிப்பைப் பெற்றவர் என்ற பெருமையை எலான் மஸ்க் பெற்றுள்ளார்.

எலான் மஸ்கின் நண்பரும், ஆரக்கிள் நிறுவனத்தின் தலைவருமான லேரி எலிசன் 19 லட்சம் கோடி ரூபாய் சொத்து மதிப்புடன் உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

# இம்ரான் கானை விடுதலை செய்யக்கோரி போராட்டத்துக்கு அழைப்பு

## 144 தடை உத்தரவு அமுல்

ஊழல் வழக்கில் பிணை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விடுதலை செய்ய கோரி அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக நாடாளாவிய ரீதியில் போராட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக லாகூர், பெஷா வர் ஆகிய நகரங்களை தலைநகர் இஸ்லாமாபாத்துடன் இணைக்கும்



நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதன்மூலம் தலைநகருக்குள் போராட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவின்படி பொதுமக்கள், நான்கு அல்லது அதற்கு அதிகமானோர், பொது இடத்தில் மக்கள் கூடுவதற்கு தடை செய்யப்பட்ட பகுதியில் கூடுவது குற்றமாக கருதப்படும். பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான்கான், பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

அவர் தனது பிரதமர் பதவிக் காலத்தில், தனக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல் இம்ரான் கானும் அவரது மனைவியும் விற்பனை செய்து சொத்து சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

மேலும் பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய இரகசிய தகவல்களை கசியவிட்டதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட “சிபர்“ வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் “சிபர்“ வழக்கை விசாரித்து வந்த பாகிஸ்தான் நீதிமன் கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் இம்ரான்கானுக்கும் அவரது மனைவிக்கும் வழங்கப்பட்ட 14 ஆண்டு சிறை தண்டனையை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கில் பிணை வழங்குமாறு கோரி இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றில் இம்ரான் கான் மேன்முறையீடு செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆனால், இம்ரான் கானுக்கு பிணை வழங்கப்பட்ட ஒரு மணித்தியாலத்திலேயே ராவல்பிண்டி பொலிசார் அவரை கைது செய்தமை குறிபிடத்தக்கது.

# ஊழல் வழக்கு; கௌதம் அதானிக்கு அமெரிக்க ஆணையம் சம்மன்

இந்தியாவின் பெரும கௌதம் அதானி. இந்தியா மட்டுமின்றி பல்வேறு நாடுகளிலும் அதானி குழுமங்கள் தொழில் செய்து வருகிறது. இந்தியாவில் துறைமுகம், மின்சாரம், சுரங்கம் உள்ளிட்ட துறைகளிலும் அதானி குழும நிறுவனங்கள் கோலோச்சி வருகிறது.



உலக பணக்காரர்கள் பட்டியலில் 22ஆவது இடத்தில் இருக்கும் அதானிக்கு எதிராக அமெரிக்காவின் நியூயார்க் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதானி குழும நிறுவனம், சூரிய ஒளி மின்சாரம் விநியோக ஒப்பந்தங்களை பெறுவதற்காக 26 கோடி டாலர்கள்(இந்திய மதிப்பில் சுமார் ரூ. 2,100 கோடி) இலஞ்சமாக இந்திய அதிகாரிகளுக்கு கொடுத்ததாக குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, இந்திய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்ததை மறைத்து, அமெரிக்காவில் இருந்து முதலீடுகளை பெற்று முறைகேட்டில் ஈடுபட்டதாக நியூயார்க் கோர்ட்டில் அமெரிக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த் தனை ஆணையம் தரப்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிபிடத்தக்கது.

# லாலிகா கால்பந்து தொடர்

## பார்சிலோனாவுக்கு எதிரான போட்டியை சமன் செய்தது செல்டோ விகோ

லாலிகா கால்பந்து தொடரின் 14ஆவது வாரத்துக்கான லீக் ஆட்டம் ஒன்றில் இறுதி நிமிடங்களில் பெற்றுக் கொண்ட இரட்டை கோல்களினால் பார்சிலோனா கழகத்திற்கு எதிரான போட்டியை 2-2 என சமநிலையில் முடித்துக் கொண்டது செல்டா விகோ கழகம்.

விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் முதல் கோலுக்கான முயற்சியில் கடுமையாக ஈடுபட்டனர். ஆட்டத்தின் 15ஆவது கொவ்ண்டே கொடுத்த பந்துப் பரிமாற்றத்தை ரெபின்ஹே பெற்று கம்பத்தினுள்



பந்தை அனுப்ப 1:0 என முன்னிலை பெற்றது பார்சிலோனா அணி. பின்னர் முதல் பாதியின் மேலதீக நிமிடங்களில் இரு அணிகளும் கோலடிக்கத் தவற முதல் பாதி 1-0 என பார்சிலோனாவின் முன்னிலையுடன் முடிவுக்கு வந்தது.

பின்னர் தொடர்ந்த தீர்க்கமான இரண்டாவது பாதி ஆட்டத்தில் பார்சிலோனா வீரர்கள் ஆதிக்கத்தை தொடர்ந்தனர்.

இதனால் போட்டியின் 61வது நிமிடத்தில் லெவண்டொவ்ஸ்கி பார்சிலோனா கழகத்திற்கான இரண்டாவது கோலை உட்செலுத்த முன்னிலையை 2-0 என மேலும் வலுவடையச் செய்தது பார்சிலோனா.

இதனை சாதகமாக மாற்றிக் கொண்ட செல்டோ விகோ கழகம் போட்டியின் 84வது நிமிடத்தில் கொண்சலாத்தின் கோலின் உதவியுடன் 2-1 என போட்டியை சவாலாக்கியது.

பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் 86ஆவது நிமிடத்தில் வைத்து ரொட்ரிகஸ் கொடுத்த பந்துக் கடத்துதலை அலவேரஸ் பெற்று கோலாக மாற்ற போட்டி 2-2 என சமநிலை பெற்றது.

# சச்சினின் மற்றுமொரு சாதனையை முறியடித்தார் கோலி




அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தனது ஏழாவது சதத்தை பதிவுசெய்த இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி, முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

அஸ்திரேலியாவுக்கு எதிரான போர்டர் கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடி வருகின்றது. முதல் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் இரண்டாம் இன்னிங்சில் விராட் கோலி ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

முன்னதாக அவுஸ்திரேலிய மண்ணில் ஆறு சதங்களுடன் அதிக டெஸ்ட் சதங்கள் அடித்த இந்திய துடுப்பாட்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் கோலி ஆகியோர் இருந்தனர்

இந்நிலையில், நேற்றைய தினம் மேலும் ஒரு சதம் அடித்ததால், சச்சினை முந்தி விராட் கோலி முதலிடம் பிடித்துள்ளார்.

மேலும், நேற்றைய ஓட்டக் குவிப்பின் மூலம் அவுஸ்திரே லியாவில் வெவ்வேறு வடிவங்களில் 12 சதங்கள் உட்பட 3500க்கும் மேற்பட்ட ஓட்டங்களை கோலி குவித்துள்ளார்.

டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் மற்றும் சர் விவியன் ரிச்சர்ட்ஸ் ஆகியோருக்குப் பிறகு 3,500 ஓட்டங்களை கடந்த மூன்றாவது வீரர் என்ற பெருமையை கோலி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிராக அதிக டெஸ்ட் சதங்கள் அடித்த சாதனை இங்கிலாந்து அணியின் ஜாக் ஹோப்ஸ் வசம் உள்ளது. அவர் ஒன்பது சதங்கள் அடித்துள்ளார்.

கோலி தற்போது இரண்டாவது இடத்தில் உள்ளார். கோலியின் சாதனைகளில் மற்றுமொரு மைல்கல் இதுவாகும்.

தற்போது வரை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கோலி 14 போட்டிகளில் 24 இன்னிங்ஸ் விளையாடி, 1457 ஓட்டங்களை குவித்துள்ளார். அதிகபட்சமாக 169 ஓட்டங்கள் அடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்: இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் விலகல்

இங்கிலாந்து - நியூசிலாந்து இடையேயான முதல் டெஸ்ட் போட்டி வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது . இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் இறுதிப்போட்டி நெருங்கி வரும் வேளையில் இந்த தொடர் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகா கருதப்படுகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த தொடருக்கான இங்கிலாந்து அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் அந்த அணியிலிருந்து காயம் காரணமாக விக்கெட் கீப்பர் ஜோர்டன் காக்ஸ் விலகியுள்ளமை குறிப்பிடத் தகத்கது.







# ஐபிஎல் 2025 மெகா ஏலம்

## 27 கோடிக்கு ரிஷப் பந்த்தை வாங்கியது குஜராத் டைட்டன்




பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட 2025ஆம் ஆண்டு ஐபிஎல் தொடருக்கான மெகா ஏலம் சவூதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகியிருந்தது.

ஏலத்தின் 10 அணிகளும் பங்கேற்றிருந்தன. அணி உரிமையாளர்கள் வீரர்களை வாங்க அதிகபட்ச 120 கோடி இந்திய ரூபாய்களை செலவு செய்ய முடியும் என்ற நிலையில் ஏலத்திற்கு முன்னதாக முக்கிய வீரர்களை ஒவ்வொரு அணிகளும் தக்கவைத்துக்கொண்டன.

இந்நிலையில், மொத்தமாக 656.75 கோடி இந்திய ரூபாயுடன் நேற்றைய ஏலம் ஆரம்பமாகியிருந்தது. வெறும் இரண்டு 9.5 கோடியை தக்கவைக்கப்பட்ட வீரர்களுக்காக செலவிட்ட பஞ்சாப் கிங்ஸ் மெகா ஏலத்தில் 110.5 கோடி என்ற மிகப்பெரிய தொகையுடன் ஏலத்தில் கலந்துகொண்டிருந்தது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 41 கோடி என்ற குறைந்த தொகையுடன் ஏலத்தில் கலந்துகொண்டிருந்தது.

இந்நிலையில், முதல் வீரராக அர்ஷ்தீப் சிங் ஏலம் விடப்பட்டார். அவரை பஞ்சாப் கிங்ஸ் RTM முறையில் 18 கோடிக்கு ஏலத்தில் தக்க வைத்தது.

தொடர்ந்து தென் ஆப்பிரிக்கா வீரர் ககிசோ ரபாடாவை 10.75 கோடி ரூபாவிற்கு குஜராத் டைட்டன்ஸ் அணி வாங்கியது. இரண்டு கோடி அடிப்படை விலையில் வந்த ஷ்ரேயாஸ் ஐயரை 26.75 கோடிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணி வாங்கியது.

கடந்த காலங்களில் ஐபிஎல் தொடரில் ராஜஸ்தான் அணிக்கான ஜொலித்த ஜோஸ் பட்லரை 15.75 கோடிக்கு குஜராத் அணி வாங்கியது. அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்கை 11.75 கோடிக்கு டெல்லி கேப்பிடல்ஸ் அணி ஏலத்தில் வாங்கியது.

இந்த ஏலத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய வீரர் ரிஷப் பந்த் அதிக தொகைக்கு லக்னோ அணி வாங்கியது. அவரை 27 கோடிக்கு ஏலத்தில் லக்னோ அணி வாங்யிருந்தது. இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் அதிக விலைக்கு ரிஷப் பந்த் ஏலம் எடுக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து முகமது சமியை 10 கோடிக்கு ஏலம் எடுத்தது சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி.

தென்னாப்பிரிக்கா அணியின் டேவிட் மில்லரை 7.50 கோடிக்கு லக்னோ அணி வாங்கியது. மேலும் இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் யுஸ்வேந்திர சாஹலை 18 கோடிக்கு பஞ்சாப் அணி வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாலை ஐந்து மணி வரையில் நடந்து முடிந்த ஏலத்தில் வாங்கப்பட்ட வீரர்களின் விபரங்களே இதில் இடம்பெற்றுள்ளனர்.

# போர்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடர்

## இந்தியா மிரட்டல் - தடுமாறும் ஆஸி.

இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போர்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியா அணி 12 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்து தடுமாறிவருகின்றது.

534 என்ற வெற்றி இலக்கை நோக்கி அவுஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது.

பெர்த் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி, முதல் இன்னிங்சில் இந்திய 150 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பின்னர் தனடு முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி, 104 ஓட்டங்களுக்கு ஆட்டமிந்தது. .

இதனையடுத்து 46 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, ஆறு விக்கெட்டுகளை இழந்து 487 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இந்திய அணி சார்பில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்களையும், நட்சத்திர வீரர் விராட் கோலி ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலிய தரப்பில் அதிகபட்சமாக நேதன் லயோன் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு 534 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனையடுத்து கடின இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலியாவுக்கு முதல் ஓவரிலேயே பும்ரா செக் வைத்தார். தொடக்க ஆட்டக்காரர் ஆன மெக்ஸ்வீனியை ஓட்டங்கள் ஒதுவும் பெறாத நிலையில் வெளியேற்றினார்.

இதனையடுத்து நைட் வாட்ச்மேனாக களமிறங்கிய கம்மின்சை சிராஜ் ஆட்டமிழக்கச் செய்தார். மேலும் பும்ரா அடுத்த ஓவரிலேயே லபுசாக்னேவை ஆட்டமிழக்கச் செய்ய ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட்டுகளை இழந்து அவுஸ்திரேலியா 12 ஓட்டங்களை பெற்றிருந்தது.

போட்டி முடிய இன்னும் இரண்டு நாட்கள் இருக்கும் நிலையில் இந்திய அணிக்கு வெற்றிவாய்ப்பு அதிகமாக காணப்படுவதாக கிரிக்கெட் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 25ஆம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.